


# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 36 • 28.07.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA • ilakku2009@gmail.com





## பாராளுமன்றத்தில் நடந்த ஒரு ‘பிரேத பரிசோதனை’

பூமிகன்

## கட்டமைப்பு ரீதியான இன அழிப்புக்கு எதிராக செப்டம்பரில் பேரெழுச்சி

அணிதிரளுமாறு விக்னேஸ்வரன் அறைகூவல்



## கூட்டமைப்பு காலாவதியாகிவிட்டது


இலக்கு மின்னிதழுக்கு ஐங்கரநேசன் சிறப்பு பேட்டி

## 2020ம் ஆண்டு சனாதிபதி தேர்தல்

### இந்தச் சூழ்நிலையை தமிழர்கள் எவ்வாறு சாதகமாக்கலாம்?

அரசியல் ஆய்வாளர் பற்றிமாகரன்

## ஹொங்கொங் அரசுக்கு எதிராக மீண்டும் போராட்டம்





## யானைச் சாணத்திலிருந்து கிடைக்கும் நன்மைகள்

# தமிழினத்தை மீண்டும் மீண்டும் ஏமாற்றலாமென கனவு காண்கிறதா கூட்டமைப்பு

## கூட்டமைப்பின் கருத்துக்கள் குறித்து தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் கேள்வி



தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா

அரசுக்கு முண்டு கொடுத்துவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்பு வாத அரசியல் நடவடிக்கைகளை ஏன் கையில் எடுத்துள்ளமைகான காரணம் என்ன என்ற வினா தாயக உறவுகளின் மத்தியில் மேலெழுந்துள்ளதோடு பாரிய அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளதாக தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் சுட்டிக்காட்டியுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமை—யிலான ஐக்கிய தேசியக் கட்சியானது ஆட்சிப்பீடத்தில் இருப்பதற்கு எந்தவிதமான நிபந்தனைகளையோ, உடன்படிக்கைகளையோ செய்யாது வரவுசெலவுத்திட்டங்கள், பெரும்பான்மையை நிரூபிக்கும் சந்தர்ப்பங்கள், நம்பிக்கை இல்லாப்பிரேரணை மீதான வாக்கெடுப்புக்கள் உள்ளிட்ட அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தமிழர்களையும் மறந்து தேசியத்தினையும் இழந்து காவல்தெய்வமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருந்து வருகின்றது. எத்தனையோ விமர்சனங்களும், வினாக்களும் பொதுவெளிகளிலும், ஊடகங்களிலும், ஏனைய பல்வேறு தரப்புக்களாலும் முன்வைக்கப்பட்டபோதும் அமைதியாக குஞ்சை அடைகாப்பது போன்று ஐ.தே.க அரசாங்கத்தின் மீது எந்தவிதமான கீறல்களும் விழாது பாதுகாத்து வந்திருந்த கூட்டமைப்பு இந்த மாதத்தின் நடுப்பகுதியிலிருந்து தான் பாதுகாத்து வந்திருந்த அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுக்களை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தொடக்கம் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்களும் சரவெடியாக அடுக்க ஆரம்பித்துள்ளனர். அரசாங்கம் எம்மை ஏமாற்றி விட்டது என்கிறார் தீடீரென விழித்தெழுந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், மைத்திரி நம்பிக்கைத் துரோகமிழைத்துவிட்டார் என்கிறார் கம்பெரலிய கனவில் மிதந்து கொண்டிருக்கும் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராஜா.

தமிழர் தாயகத்தில் பௌத்த மதத்தின் ஆக்கிரமிப்பால் அழிவடையும் இந்து மதத்தைக் காப்பதற்கு இந்தியா உதவவேண்டும் என்கிறார் தமிழ் மக்களின் அதிக ஆணைபெற்றவர் என்று மார்பு தட்டிவரும் சிறிதரன், புதிய



அரசியலமைப்பு வராது விட்டால் நாடு பாரிய விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்கிறார் சுமந்திரன்.

மைத்திரியும், ரணிலும் ஏமாற்றி—விட்டதால் அரசாங்கத்தினை பதவியில் தொடரவைப்பதா இல்லையான என்ற கோணத்தில் செல்வம் அடைக்கலநாதன், யோகேஸ்வரன், ஸ்ரீநேசன், கோடீஸ்வரன் என தமது மனதுக்குப்பட்டவகையில் அரசுக்கு எதிரான வார்த்தைகளை அள்ளிவீசுகின்றார்கள். சனநாயகத்தினை உறுதிப்படுத்துவதற்காக ரணில் அரசாங்கத்தினை ஆட்சியில் அமரவைத்திருக்கின்றோம். யானை ஆட்சியில் அமர்ந்திருந்தாலும் அதன் பாகனாக இருக்கும் கூட்டமைப்பின் அங்குசத்தின் சுட்டுக்களிலேயே அது நகர்கின்றது என்று பூடகம் போட்டவர்கள் ஏன் இவ்வாறு திடீரென்று அரச எதிர்ப்புவாத கருத்துக்களை காட்டுத் தீயாய்ப் பரவ விடுகின்றார்கள் என்ற சந்தேகம் அனைவரினதும் மனதில் இயல்பாகவே எழுகின்றது. சிறீலங்காவின் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய சனாதிபதி தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தல் செப்டம்பர் மாத

தொடர்ச்சி 04 ஆம் பக்கம் →

## தேசியத் தலைவர் பிரபாகரனின் விட்டுக் கொடுப்பும் நல்லெண்ணமும் சகலரிடமும் இருக்க வேண்டும்



வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தலைமையிலான புதிய கூட்டணிக்குள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வர வேண்டுமெனத் தெரிவித்த மாகாண முன்னாள் அமைச்சரும் ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகத்தின் தலைவருமான அனந்தி சசிதரன், ஈபிஆர்எல்எப் வந்தால் தாம் வரமாட்டோம் என்ற முன்னணியின் நிலைப்பாட்டை அவர்கள் மீள் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

மேலும் குற்றங்கள் காணுவதாக இருந்தால், அனைத்துக் கட்சிகள் மீதும் குற்றங்களைக் கண்டுகொண்டே இருக்கலாமென்றும் புரிந்துணர்வின் அடிப்படையில் செயற்பட வேண்டுமென்றும், அவர் வலியுறுத்தினார்.தேசியத் தலைவர் பிரபாகரனின் விட்டுக் கொடுப்பும் நல்லென்னணமும் சகலரிடமும் இருக்க வேண்டுமெனவும், அவர் கூறினார். யாழ். ஊடக அமையத்தில், நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## ஐ.தே.கட்சிக்குள் வெடிக்கும் பூகம்பம்

### குழப்பத்தில் ரணில்



சஜித் பிரேமதாசவுக்கு இருக்கும் கல்வித்தகைமையை முடியுமானால் முன்வைக்குமாறு அமைச்சர் ரவி கருணாநாயக்க பகிரங்க சவால் விட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் இதனை கூறினார். முடியுமானால் தனக்கு இருப்பதாக கூறும் கல்வித் தகைமைகளை முன்வைக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவிடம் அக்கட்சியின் உப தலைவர் ரவி கருணாநாயக் பகிரங்க சவால் விடுத்தார். குறைந்தது சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறாவது உள்ள ஒருவரையே ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கவுள்ளோம். தனக்கு கல்வித் தகுதிகள் இருப்பதாக கூறித் திரிவதில் பயனில்லை. ஊடகங்களிடம் அதனை முடியுமானால் பொது மக்களிடம் சமர்ப்பிக்கவும் எனவும் அமைச்சர் ரவி கருணாநாயக்க மேலும் குறிப்பிட்டார். சனாதிபதி தேர்தலில் தான் போட்டியிட வேண்டும் என்பதற்காக இந்தியாவில் உள்ள ஆலயங்களில் வழிபாடுகளிலும் யாகங்களிலும் ஈடுபட்டுள்ள பிரதமர் ரணில் கடுமையான குழப்பத்தில் உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## சனாதிபதி வேட்பாளராக கோத்தபாய - வெளியாகியது தகவல்

பொதுஜன பெரமுனவின் சனாதிபதி வேட்பாளராக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ச நிறுத்தப்படுவது உறுதியாகிவிட்டது என கொழும்பில் உள்ள தனியார் ஊடகம் ஒன்று தகவலை தெரி—வித்துள்ளது. ஆகஸ்ட் 11 ம் திகதி இடம்பெறவுள்ள கட்சியின் மாநாட்டில் முன்னாள் சனாதிபதி மகிந்த ராஜபக்ச கட்சியின் தலைமைப்பொறுப்பை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்வார் எனவும் அதன் பின்னர் அவர் அனேகமாக கட்சியின் சனாதிபதி வேட்பாளரை அறிவிப்பார் எனவும் தெரிவித்துள்ளது. மேலும் தெரிவித்துள்ளதாவது.

இந்த சந்திப்பிற்கு முதல்நாள் பொதுஜன பெரமுனவின் கட்சி தலைவர்களிற்கு மஹிந்த ராஜபக்ச தனது முடிவை தெரிவிப்பார். முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச கடந்த புதன் கிழமை சிங்கப்பூரிலிருந்து மருத்துவ—சிகிச்சையின் பின்னர் நாடு திரும்பினார். அவரை வரவேற்பதற்கான நிகழ்வுகள் எதுவும் இடம் பெறாமலிருப்பதை உறுதி செய்ய மகிந்த ராஜபக்ச விரும்பினார். இன்னமும் கோத்தாபய குறித்த அறிவிப்பு உத்தியோகப்பூர்வமாக வெளியாகாததன் காரணமாகவே அவரது வருகைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. கோத்தாபய ராஜபக்ச சனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்படும் நிகழ்வினை பெருமளவில் முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. சனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டதும் கோத்தாபய ராஜபக்சவை களனி விகாரைக்கு பேரணியாக அழைத்து செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் அவரை அனுராதபுரம் மகாபோதி விகாரைக்கு வாகனப்பேரணியாக அழைத்து செல்வதற்கான திட்டங்களும் காணப்படுகின்றன அதன் பின்னர் அவர் கண்டிக்கும் செல்வார் என தனியார் ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

## கொழும்பில் மர்ம நபர்கள் துப்பாக்கிச் சூடு இருவர் பலி

கொழும்பு, கொஹு¬வல, ஜம்புகஸ்முல்ல மாவத்தையில் இன்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கி சூட்டில் இருவர் உயிரிழந்தனர் என காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். இரண்டு மர்மநபர்கள் லான்ட் குரூசர் வாகனத்தின் மீது துப்பாக்கி சூடு மேற்கொண்டுள்ளனர்.

துப்பாக்கி சூட்டில் காயமடைந்த இருவரும் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தனர். உடுஹமுல்ல பிரதேசத்தை சேர்ந்த 39 வயதான ரணவக்க சுசில் ருவன் பெரேரா என்ற அந்த வாகனத்தின் சாரதியும், அதில் பயணம் செய்த 40 வயதான நபருமே உயிரிழந்தனர்.

## சனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணி யாருக்கு ஆதரவு?

மக்களுக்கான தீர்வு திட்டம் தொடர்பாக எழுத்து மூலமான உத்தரவாதத்தை தரும் தரப்புக்கே ஆதரவு வழங்கப்படும் என்று தமிழ் மக்கள் கூட்டணி அறிவித்துள்ளது. மேலும், இந்த உறுதிமொழியானது இந்தியாவின் மத்தியஸ்த்துடன் நடைபெறவேண்டும் என்றும் அந்தக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. யாழில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே, அந்த கட்சியின் கொள்கைப் பரப்புச் செயலாளர் அருந்தவபாலன் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் தெரிவித்த அவர், “எதிர்வரும் சனாதிபதி தேர்தலில் சிறுபான்மை மக்களின் வாக்குகள் மிக முக்கியமாகக் காணப்படுகின்றன. நாட்டிலுள்ள அனைத்து தமிழ் மக்களின் வாக்குகளையும் இணைத்து எமக்கு வேண்டியவற்றை சாதித்துக்கொள்ள முடியும். தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டம் தொடர்பாக எழுத்து மூலமான உத்தரவாதத்தை தரும் தரப்புக்கே ஆதரவு வழங்கப்படும். இந்த உறுதிமொழியானது இந்தியாவின் மத்தியஸ்த்துடன் நடைபெறவேண்டும்” என மேலும் தெரிவித்துள்ளார்.

## கோத்தாவால் மஹிந்தவின் குடும்பத்தில் குழப்பம்

சனாதிபதி வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும், மகிந்தவின் சகோதரருமான கோத்தபாயவை நியமிப்பதற்கு மகிந்த ராஜபக்ச குடும்பத்தினுள் பெரும் குழப்பம் நீடிக்கின்றது.

குறிப்பாக அடுத்ததாக நாட்டின் தலைமைப்பொறுப்பினை ஏற்பதற்கு பல திட்டமிடல்களுடன் தயாராகி வரும் நாமல் ராஜபக்ச தனது சிறிய தந்தையிடத்தில் சனதிபதி பதவி செல்வதை கொஞ்சமும் விரும்பவில்லை. இதனை தனது தயார் ஊடாக தந்தைக்கு தொடர்ச்சியாக கூறி மனதை மாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

இதேவேளை, தமது தரப்புக்கு சிறுபான்மை மக்களின் ஆதரவு தேவை என்பதை மையப்படுத்தி எதிர்வரும் 29ஆம்திகதி வடக்கிற்கான பயணமொன்றையும் நாமல் ராஜபக்ச மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் தீ



யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் அமைந்துள்ள பகுதியில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. வவுனியா வளாகத்திற்கென ஒதுக்கப்பட்ட பகுதியில் பற்றைக்காடுகளாக காணப்பட்ட பிரதேசத்திலேயே இன்று (ஞாயிற்றுக்கிழமை) இவ்வாறு தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

கடும் காற்று மற்றும் வெயில் காரணமாக தீ வேகமாகப் பரவியதையடுத்து அதனைக் கட்டுப்படுத்துவதற்காக வவுனியா நகரசபையின் தீ அணைப்பு பிரிவுக்கு தகவல் வழங்கப்பட்டு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. வவுனியா வளாகத்தின் கட்டடத் தொகுதிக்கு தீ பரவாது தடுக்கப்பட்டுள்ளமையினால் பாரிய சேதங்கள் ஏற்படவில்லை.

## சிறீலங்கா வெடிகுண்டு தாக்குதல் தொடர்பாக காஷ்மீர் மாநிலத்தில் சோதனை

ஜம்மு—காஷ்மீர் மாநிலம் பாராமுல்லா மாவட்டத்தில் நான்கு இடங்களில் தேசிய புலனாய்வு முகமை சோதனை நடத்தி வருகிறது. இலங்கையில் ஈஸ்டர் தினத்தன்று, ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பானது தொடர் குண்டுவெடிப்பு தாக்குதலை நிகழ்த்தியது.

இதில் 250க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். இந்த தற்கொலை படை தாக்குதலை நிகழ்த்திய பயங்கரவாதிகளுடன் தமிழகம் மற்றும் கேரளாவை சேர்ந்த சிலருக்கு தொடர்பு இருப்பதாக அந்நாட்டு உளவுத்துறை கூறி இருந்தது. இதன்படி, கேரளாவிலும், தமிழகத்திலும் என்.ஐ.ஏ. எனப்படும் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டு பலரை கைது செய்தனர். பலரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் காஷ்மீரின் வடக்கே பாராமுல்லா மாவட்டத்தில் நான்கு இடங்களில் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் இன்று காலை வாகனங்களில் வந்து இறங்கி சோதனையில் ஈடுபட்டுள்ளனர். பாதுகாப்பு அதிகாரிகளின் துணையுடன் இந்த சோதனை நடந்து வருகிறது.

## தொடரப்போகின்றதா இந்த மரணங்கள்?

காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடிய 38 உறவுகள் இதுவரையில் உயிரிழந்துள்ளனர் என்ற தகவல் அதிர்ச்சியடையச் செய்திருக்கின்றது. காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறியாமலேயே இவர்கள் மரணத்தைத் தழுவியிருக்கின்றார்கள். அவர்கள் தேடிய உறவுகள் எவருமே இதுவரையில் கண்டறியப்படவும் இல்லை. இதற்காகப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் பொறுப்பை ஏற்கவும் இல்லை. இவர்களுடைய பிரச்சினைகளைத் தமது அரசியலுக்குப் பயன்படுத்தியவர்கள், வாக்கு வேட்டைக்கு அப்பால், எதனையும் செய்யத் தயாராகவும் இல்லை.

காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை போர் ஆரம்பிக்கப்பட்டபோதே தொடங்கிவிட்டது. இது போரின் விளைவுகளில் இதுவும் ஒன்று எனச் சொல்லிவிட்டு சும்மா இருந்துவிட முடியாது. யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் சர்வதேசப் போர் நியதிகள் — சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின்படி போரை நடத்தியிருந்தால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்காது. போரின்போது கைது செய்யப்படுபவர்கள், சரணடைபவர்களை எவ்வாறு நடத்த வேண்டும் என்பதை சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் சொல்கின்றன. சிறீலங்கா உட்பட அனைத்து நாடுகளுமே இதனை ஏற்றுக்கொண்டுதான் உள்ளன.

போர்க்கால சனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ச இது குறித்து தெரிவித்த கருத்தொன்று முக்கியமானது. "எமது படை— யினர் ஒரு கையில் மனிதாபிமானச் சட்டப் புத்தகத்தையும், மறு கையில் துப்பாக்கியையும் ஏந்திக்கொண்டே போர் புரிகின்றார்கள்" என்பதுதான் அவர் சொன்னது. ஆனால், ஒரு கையில் துப்பாக்கியும் மறுகையில் இரத்தக் கறைகளுமே இருந்துள்ளன என்பது அனைவருக்கும் தெரியும். சர்வதேச மனிதாபிமான அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் அனைவரையும் வன்னிப் பெருநிலப் பரப்பிலிருந்து வெளியேற்றி— விட்டுத்தான் இறுதிப்போரை அரசாங்கம் நடத்தியது.

ஒரு போராட்ட அமைப்பை முறியடிப்பதற்காக கொடூரமான இனப்படுகொலையை சிறீலங்கா அரசாங்கம் செய்தது. அதற்கான சாட்சியங்கள் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் மனிதாபிமான அமைப்புக்களின் பிரதிநிதிகளும், ஊடகவியலாளர்களும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருந்தனர். ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்ட அதேவேளையில், கைதானவர்கள், சரணடைந்தவர்களின் தொகையும் பல நூற்றுக்கணக்கில் இருக்கலாம் எனச் சொல்லப்பட்டாலும், திட்டவட்டமான தகவல் இல்லை.

சாட்சியங்களற்ற இனப்படுகொலையாக இதனை நடத்திமுடிப்பதற்கு அரசாங்கம் முயன்றாலும், சரணடைந்தவர்கள் தொடர்பில் நேரில் கண்ட பல சாட்சியங்கள் உள்ளன. படையினரிடமும், அதிகாரிகளிடமும் தமது உறவுகளை போரின் இறுதியில் ஒப்படைத்தவர்கள் கடந்த பத்து வருடங்களாக அவர்களைத் தேடி அலைகின்றார்கள். வீதி ஓரங்களில் கொட்டில்களை அமைத்துவிட்டு வருடக்கணக்காக அவர்கள் நடத்தும் போராட்டம் மனிதாபிமானம் உள்ள அனைவரது மனச்சாட்சியையும் சுடுகின்றது. போராடுபவர்களில் பெரும்பாலானவர்கள் தாய்மார், மனைவிமார். தாய்மார்களில் பெரும்பாலானவர்கள் வயோதிபத்தினாலும், நோய்களாலும் சோர்ந்துபோயுள்ளார்கள். தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறியமுடியாமலிருப்பதும், அரசாங்கம் மற்றும் அரசியல் தலைவர்களின் அக்கறையற்ற போக்கும் அவர்களை மேலும் சோர்வடையச் செய்கின்றது. இவ்வாறுதான் 38 பேர் இதுவரையில் மரணித்துள்ளார்கள் என்பது அதிர்ச்சியான தகவல். இதன்மூலம் சொல்லப்படும் செய்தியும் முக்கியமானது.

இந்தப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது அவர்களுடைய உறவுகளுக்குச் சொல்லப்பட வேண்டும். அதனை அறிந்துகொள்வதற்கான அனைத்து உரிமைகளும் அவர்களுக்கு உள்ளது. அரசாங்கம் அமைக்கும் ஆணைக்குழுக்களும், செயலகமும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைத் தரப்போவதில்லை. இது வெறுமனே சில தாய்மார் நடத்தும் போராட்டமாக இல்லாமல் அனைவரும் பங்கேற்கும் போராட்டமாக மாற்றப்படுவதுடன், சர்வதேச விசாரணையின் தேவையும் உணர்த்தப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் பேரவை செப்டம்பர் 1 ஆம் திகதி நடத்தவுள்ள போராட்டத்துக்கான ஆறம்சக் கோரிக்கைகளில் இதுவும் ஒன்றாக உள்ளது. 39 ஆவது அன்னை உயிரிழக்கும் வரை பார்த்துக்கொண்டிருக்காமல், இதனை ஒரு மக்கள் போராட்டமாக மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பு ஈழத்தமிழர்கள் அனைவருக்கும் உள்ளது. அதன் மூலம் சர்வதேச விசாரணை ஒன்றின் மூலம் மட்டுமே இவர்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

# மணலாறில் தமிழர்களின் பூர்வீக நிலம் 1036 ஏக்கர் சுவீகரிப்பு

## வனஜீவராசிகள் திணைக்களம் நடவடிக்கை: கண்டுகொள்ளாத கூட்டமைப்பு

தமிழர் தாயகப் பகுதிகளில் உள்ள தமிழ் மக்களது பூர்வீக நிலங்களை அபகரிக்கும் செயற்பாடுகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், வடக்கு — கிழக்கு மாகாணங்களை பௌதீக ரீதியாக இணைக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் நில அபகரிப்பு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. முப்பத்து ஐந்து வருடங்களுக்கு முன்னர் முல்லைத்தீவு — கொக்குத்தொடுவாய் கிராமத்திலிருந்து விரட்டப்பட்டிருந்த தமிழ் விவசாயிகள், மீண்டும் 2012 ஆம் ஆண்டு தங்களுடைய கிராமங்களுக்குத் திரும்பி வந்திருந்தபோது, விவசாயம் செய்யக்கூடிய தமது தாழ்நிலப் பகுதிகளை சிங்களக் குடியேற்றவாசிகளிடம் இழந்ததுடன் அதற்கு நீர்ப்பாசனம் செய்யும் நீரேரிகளையும் இழந்துள்ளனர். இவ்வாறான நிலையில் தற்போது இலங்கை வன ஜீவராசிகள் திணைக்களம் தமிழ் மக்களுடைய மேட்டு நிலக் காணிகளையும் அதாவது மானாவாரியாகப் பயிர் செய்யக்கூடிய காணிகளையும் பறிமுதல் செய்ததோடு, அந்தக் காணிகளைப் பறவைகள் சரணாலயமாக மாற்றியுள்ளதாக பாதிக்கப்பட்டுள்ள தமிழ் விவசாயிகள் விசனம் வெளியிட்டுள்ளதாக தமிழ் நெற் செய்தித்தளம் தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கை காரணமாகத் தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைக்கும் இந்தப் பகுதிகளைக் கடற்கரையின் மூலமாகத் துண்டிக்கும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கொக்குத்தொடுவாயில் மீளக்குடியமர்ந்திருக்கும் தமிழ் விவசாயிகளில் ஒருவரான சந்திரசேகரம் கந்தையா தமிழ் நெற் செய்தித் தளத்திற்கு குறிப்பிட்டுள்ளார். கொக்குளாய் கடல்நீரேரிக்கும் கரைத்துறைப் பற்று கடலுக்கும் அருகில் அமைந்துள்ள கொக்குத்தொடுவாய் கிராமமானது, விவசாயம் மற்றும் மீன்பிடியை பிரதான வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டுள்ளது. தமிழ் விவசாயிகள் ஆயிரத்து முப்பத்தாறு ஏக்கர் தாழ்வு நிலத்தை மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்குப் பறிகொடுத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தக் கிராமத்தைச் சேர்ந்த தமிழர்களுக்கு கடந்த இரண்டாயிரத்துப் பன்னிரண்டாம் ஆண்டு குடியேற்றத்துக்கென குறைந்தளவான மக்கள் வசிக்கும் நிலங்கள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டதாகவும், எனினும் தற்போது அவர்கள் தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்த முடியாமல் மீண்டும் அங்கிருந்து இடம்பெயரும் அவலத்துக்கு முகம் கொடுத்துள்ளதாகவும் கந்தையா மேலும் தெரிவித்துள்ளார்.




தாழ்நிலப் பகுதிகளில் காணப்படும் விவசாய நிலங்கள் மற்றும் அதற்குப் பயன்படுத்தப்படும் நீர்ப்பாசனக் குளங்கள் ஆகியன சிங்களக் குடியேற்றவாசிகளால் மணலாறு அதாவது வெலி ஓயா பிரிவின் கீழ் 2012 ஆம் ஆண்டுக்கு முன் மாற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் தங்களது வாழ்வாதாரத்தைத் தொடர நினைத்த தமிழ் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. வெலி ஓயா எனப்படும் சிங்களக் கிராமமானது மணலாறு எனப்படும் பழமையான தமிழ்க் கிராமத்தை அழிக்கும் முகமாகவே உருவாக்கப்பட்டது. இலங்கை அரசாங்கமானது மகாவலித் திட்டத்தைத் தமிழ்ப் பிரதேசங்களை சிங்கள மயமாக்கும் நடவடிக்கைக்குப் பயன்படுத்துகின்றது. அதாவது வடக்கையும் கிழக்கையும் பிரிப்பது கொழும்பை மையமாகக் கொண்ட அரசின் முக்கிய நோக்கமாகக் காணப்படுகின்றது. வடக்கையும் கிழக்கையும் நில ரீதியாகப் பிரிப்பதன் மூலம் தமிழர்களின் பிரதேச ரீதியான ஒற்றுமையை சிதைப்பதே இதன் நோக்கமாகும். மீள்குடியேறிவரும் தமிழர்கள் தங்களுடைய விவசாய நிலங்களுக்கு அனுமதிக்கப்படவில்லை. ஆரம்பத்தில் இலங்கை இராணுவத்துடன் சேர்ந்து செயற்படும் கண்ணிவெடி அகற்றும் குழுக்கள் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி தமிழ் விவசாயிகளை அவர்களது விவசாய நிலங்களுக்குள் அனுமதிக்கவில்லை.

இந்த உயர்ந்த நிலங்களை விவசாயிகள் மானாவாரி என்று அழைப்பார். ஏனெனில் இந்த நிலங்களில் பருவ மழையை அடிப்படையாகக் கொண்டே விவசாய நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது. அந்த விவசாயி மேலும் கருத்துத் தெரிவிக்கையில், வெள்ளைக் கல்லடி தீ, முந்தல், குஞ்சுக்கால்வெளி, கோட்டைக்கணி ஆகியன பகுதிகளைச் சேர்ந்த நிலங்கள் பறவைகள் சரணாலயத்துக்காக சுவீகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அந்தப் பகுதிகளைச் சேர்ந்த தமிழ் விவசாயிகள், ஆங்கிலேயர் காலத்திலிருந்து குறித்த காணிகளுக்கான உறுதிப் பத்திரங்களை வைத்திருக்கின்றனர். எனினும் இலங்கை வனஜீவராசிகள் திணைக்களமானது இந்த நிலங்களுக்குள் புகுந்து எல்லைக் கற்களை நட்டுள்ளனர். இந்த செயற்பாடு கண்ணிவெடி அகற்றும் செயற்பாடு இடம்பெறும் முன்னரே மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது இந்தப் பகுதியானது கொக்குளாய் சரணாலயம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சரணாலயமானது கொக்குளாய்க்குப் பத்துக் கிலோமீற்றர் தெற்காக ஆரம்பத்தில் காணப்பட்டது. எனினும் தற்போது அது வடக்காக நகர்ந்து கொக்குத்தொடுவாய் வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக கந்தையா மேலும் தெரிவித்தார்.

---

02 ஆம் பக்க தொடர்ச்சி ➔

பிற்பகுதியில் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், சனாதிபதி தேர்தலை எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கும் டிசம்பர் மாதம் 7ஆம் திகதிக்குமிடையிலான ஒரு சனிக்கிழமை நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகளுக்கு தயாராகி வருவதாகவும் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

மறுபக்கத்தில் இனப்படுகொலையை அரங்கேற்றிய மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொதுஜன முன்னணி எதிர்வரும் மாதம் 11ஆம் திகதி தனது சனாதிபதி வேட்பாளரை அறிவிப்பதற்குரிய முனைப்புக்களைச் செய்துவரும் அதேநேரம் ஆரம்பகாலம் தொட்டு திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல் ஊடாக தமிழர்களை நசுக்கி வரும் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் 5ஆம் திகதி தனது புதிய கூட்டணிக்கான உடன்படிக்கை நிகழ்வையும் முன்னெடுக்கவுள்ளதாகவும் அறிவித்துள்ளது. இவ்வாறான நிலையில் முஸ்லிம் கட்சிகள் ஐ.தே.க தரப்புடன் இணைவது ஏறக்குறைய உறுதியாகிவிட்ட நிலையில் கூட்டமைப்பும் பெரும்பாலும் அவ்வாறான முடிவொன்றையே எடுக்கவுள்ளது. மகிந்த இனவழிப்புக்கு காரணமாக இருந்தவர் என்பதால் அவரை ஆதரிக்க முடியாது என்பதில் நியாயமான காரணம் இருந்தாலும், ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிப் பதற்கு கூட்டமைப்பிடம் நியாயமான காரணங்கள் எதுமே இல்லை.

மேலும் தற்போதும் அக்கட்சியின் அரசுக்கு எந்தவிதமான நிபந்தனைகளுமின்றி சரணாகதியடைந்து ஆட்சியில் அமர்வதற்கு முண்டுகொடுத்துக் கொண்டிருக்கும் கூட்டமைப்பு சனாதிபதி தேர்தல் உட்பட அடுத்து வரும் எந்தவொரு தேர்தலிலும் தமிழ் மக்களிடத்தில் வாக்குகளை கேட்டுச் செல்வதற்கு எவ்விதமான விடயங்களும் கையில்லை. உரிமைகளை பெற்றுத்தருவோம் என்றோ அல்லது அபிவிருத்தியை பெற்றுத்தருவோம் என்றோ கூறி தாம் சார்ந்திருக்கும் தென்னிலங்கை சிங்கள, பௌத்த பெருந்தேசியவாத கொள்கையைக் கொண்ட ஐ.தே.கவுக்கு வாக்குகளை சேகரிக்க முடியாது. யானையின் தும்பிக்கையாக இருக்கும் தம்மீது தமது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர் என்பதை பட்டவர்த்தனமாக புரிந்திருக்கும் கூட்டமைப்பு தேர்தல்களுக்கு முன்னதாக மக்களிடத்தில் செல்வதற்கான வழியை அமைப்பதற்காகவே இத்தகைய எதிர்ப்பு வாத அரசியல் நாடகமொன்றை மெல்லென அரங்கேற்ற ஆரம்பித்தள்ளது என்பது வெளிப்படையாகின்றது.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2015ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரையில், வரவு செலவுத்திட்டங்களுக்கு கண்மூடித்தனமாக ஆதரவு வழங்கியது, மூன்று தடவைகளுக்கு மேலாக நம்பிக்கை இல்லாப்பிரேரணை கொண்டுவரப்பட்டபோது அதனை எதிர்த்து வாக்களித்து தோற்கடித்து, ஐ.தே.க அரசாங்கத்தினை காப்பாற்றியது, ஒக்டோபர் புரட்சியின் போது எவ்விதமான நிபந்தனையுமின்றி ஆட்சியமைப்பதற்கு கைகொடுத்திருந்தது, தாயகம், தேசியம், சுயநிர்ணயம், பகிரப்பட்ட இறையாண்மையுடன் இணைந்த வடகிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு என்ற மக்கள் ஆணை பெற்ற கோட்பாட்டை கைவிட்டு ஒற்றை ஆட்சிக்குள் தீர்வினை தேட விளைந்தது, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் விடயம் உட்பட தாயக தமிழர்கள் முகங்கொடுக்கும் எந்தவொரு ஆக்கிரப்புக்கள், கையகப்படுத்தல்கள் உள்ளிட்டவற்றுக்கு எதிராக எந்தவிதமான சனநாயகப் போராட்டங்களையோ அல்லது முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களுக்கு ஆதரவையோ வழங்காதும் இருந்தது.

இவற்றை விடவும், ரணங்களைச் சுமக்கும் எந்தவொரு உறவுகளின் மனங்களில் உள்ள வேதனைகளையும் உணராது சர்வதேச அரங்கில் நீதிகோரலுக்காக நிறைவேற்றப்பட்ட ஜெனீவா பிரேரணையும் நீர்ப்புறச்செய்து தான் முண்டுகொடுக்கும் அரசாங்கம் மூச்சுவிட்டுச் செயற்படுவதற்காக செவ்வனே காப்பாற்றியிருந்தது கூட்டமைப்பு. இவ்வளவு தூரம் பௌத்த சிங்கள பேரினவாத அரசாங்கத்திடம் சரணாகதியடைந்து விட்டு எவ்வாறு தாயகத்தில் உள்ள உறவுகளிடத்தில் மீண்டும் தமக்கோ அல்லது தாம் சார்ந்த தென்னிலங்கை தரப்பினருக்கோ வாக்குகளை கோருவது. ஆகவே தான் மகிந்தவை பரம விரோதியாகவும், தாம் தற்போது சார்ந்திருக்கும் தென்னிலங்கை தரப்பினை மென்வலு விரோதியாகவும் சித்தரித்து பகிரங்க வெளியில் எதிர்ப்புக்குரல் எழுப்பும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன.

உரிமைகளுக்காகவும், அபிலாசைகளுக்காகவும் ஏழு தசாப்தத்திற்கும் மேலாகவும் காத்திருக்கும் பாரம்பரியம் கொண்ட தன் இனத்தினையே இலகுவாக ஏமாற்றி தமது அரசியல் இருப்பினையும் சுகபோகத்தினையும் பாதுகாக்க விளையும் அரசியல் தரப்புக்களின் மாய வித்தை என்பது தாயக உறவுகள் தெளிவாக உணர்ந்துள்ளனர். ஆகவே இந்த எதிர்ப்புவாத அரசியல் சரசரப்புக்களுக்கு ஒருபோதும் பனங்காட்டு நரிகள் அஞ்சப்போவதுமில்லை. சோரம்போகப் போவதுமில்லை என்பது திண்ணம்.

# கட்டமைப்பு ரீதியான இன அழிப்புக்கு எதிராக செப்டம்பரில் பேரெழுச்சி

## அனைவரையும் அணிதிரளுமாறு விக்னேஸ்வரன் அறைகூவல்



இனப் படுகொலைக்கு எதிரான "எழுகதமிழ்" நிகழ்வு போன்று வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்படும் சிங்கள, பௌத்தமயமாக்கலுக்கு ஒட்டுமொத்த எதிர்ப்பை வெளிப்படுத்துவதோடு தமிழ் மக்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் ஆகியவற்றுக்கு விரைந்து நீதிகோரி சிங்கள அரசாங்கத்திற்கு அழுத்தமளிக்கும் வகை—யினரும் சர்வதேசச் சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் எதிர்பார்க்கப்பட்ட நிகழ்வுகளை காலதாமதமின்றி முன்னெடுக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பேரவை அலுவலகத்தில்; நேற்று மாலை நடைபெற்ற மத்திய குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அரசியல், சமூக மற்றும் பொருளாதார ரீதியாக இந்நாட்டில் எமது தமிழ் மக்கள் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் இன்று நின்று கொண்டிருக்கிறார்கள். தமிழ் அரசியல் கட்சிகளின் சுயநல அடிப்படை—யிலான போட்டி அரசியல் ஒருபுறம், மறுபுறத்தில் தமிழ் மக்களின் இருப்பை வடக்கு கிழக்கில் இல்லாமல் செய்யும் பொருட்டு அரசாங்கத்தின் திட்டமிட்ட நில அபகரிப்பு நடவடிக்கைகளும், சிங்களக் குடியேற்றங்களும், பௌத்தமயமாக்கலும் முன்னெப்போதையும் விட அதிகரித்துள்ளன. 10 வருடங்கள் ஆகியுள்ளபோதிலும் இனப்படுகொலைக்கு உட்படுத்தப்பட்ட எமது மக்களுக்கு எந்த வித நீதியோ தீர்வோ வழங்கப்படவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் அரசியல் கட்சிகளையும் மக்களையும் சரியான பாதையில் நெறிப்படுத்திப் போராட்டப் பாதையை செம்மைப்படுத்துவதற்கு சிவில் சமூகம் மிகவும் காத்திரமான ஒரு வகிபாகத்தை மேற்கொள்ள வேண்டி இருக்கின்றது. சந்தடி இன்றி எமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் யுத்தத்துக்கு எதிராக எமது மக்களின் எதிர்ப்புக்களை வலுவூட்டுவது காலத்தின் கட்டாயமாகும். எமது அல்லல்களையும் துன்பங்களையும் தொலைதூரத்தில் இருக்கும் எமது சக பூகோள பிரசைகளுக்கும் அதிகாரமையங்களுக்கும் கொண்டு சென்று நடந்த மற்றும் நடக்கும் அநியாயங்களுக்கு எதிராக அவர்களை நடவடிக்கை எடுக்கத் தூண்டுவதற்கான நடவடிக்கைகளை நாம் எடுக்கவேண்டும். எமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் அநியாயங்கள் மற்றும் அட்டூழியங்களை நாம் வெளிஉலகத்துக்கு எவ்வளவுக்கு எவ்வளவு வெளிப்படுத்துகின்றோமோ, எவ்வளவுக்கு எவ்வளவு யதார்த்தநிலையை அவர்களுக்கு எடுத்துக்கூறுகின்றோமோ, எவ்வளவுக்கு எவ்வளவு எமது வலிகளை அவர்களின் வலிகளாக உணரும்படிசெய்யப்படுகின்றோமோ, அப்பொழுதுதான் ஏனைய சமூகங்களைநாம் எம்மை நோக்கி கவனம் செலுத்த வைக்கவும் எமக்காகச் செயற்படவும் வைக்கமுடியும்.

எமது துன்பங்கள், துயரங்களை எடுத்துக்கூறி ஒரு பகிரப்பட்ட மனிதநேய உணர்வை சர்வதேச ரீதியில் ஏற்படுத்துவதற்குப் பாடுபடும் அதேவேளை, அநியாயங்களுக்கு எதிரான மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் நாம் வலுப்படுத்தவேண்டும். இந்தவகையில், தமிழ் மக்கள் பேரவைக்கு முன்பாக ஒருபெரும் பணிகாத்துக் கிடக்கின்றது. இங்கு கூட்டங்களை நடத்துவதும் பின்னர் கலைந்து செல்வதுமாக நாம் எமது காலங்களை இனிமேலும் கடத்திச்செல்லமுடியாது. தமிழ் மக்கள் பேரவை ஒருமக்கள் இயக்கம் என்ற அடிப்படையில் எமது சமூகத்தின் அங்கங்களான பல்கலைக்கழகம், இந்து, கத்தோலிக்க அமைப்புக்கள், வர்த்தக சங்கங்கள், மீன்பிடி சமாசங்கள், விவசாயிகள் சம்மேளனங்கள், தமிழர் மரபுரிமைப்பேரவை, தமிழ் சிவில் சமூகம் போன்ற பலவற்றுடன் இணைந்து மக்கள் மயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை மீண்டும் எழுச்சியுடன் முன்னெடுக்க வேண்டியுள்ளது. சிலகாலம் நாங்கள் சற்றுத் தடுமாற்றத்தில் இருந்துவந்தோம்.

இனி அதற்கு இடமில்லை. நிலஆக்கிரமிப்பு, மத ஆக்கிரமிப்பு, மத்திய அரச திணைக்களங்களின் உள்ளீடல், தமிழ் பேசும் மக்களிடையே பிளவுகள் ஏற்படுத்தும் ஆள்பவர்களின் சூழ்ச்சி ஆகியன மிகவேகமாக எம்மைப் பாதித்துவருகின்றன. இராணுவத்தினரின் தலையீடுகளும் தற்போது புதிய உத்வேகத்துடன் நடைபெற்று வருகின்றன.

எமது பூர்வீக நிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலஆக்கிரமிப்பு, சர்வதேச போர்க்குற்ற விசாரணையில் ஏற்பட்டுள்ள தேங்குநிலை, அரசியல் கைதிகளின் விடுதலை, வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோர் சம்பந்தமான நம்பத்தகு விசாரணைகள் நடைபெறாமை, இராணுவ மயமாக்கல் மற்றும் மீள் குடியமர்வு




போன்ற ஆறு விடயங்கள் தொடர்பில் நியாயம் கோரி சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்று கருதுகின்றேன். தமிழ் மக்களின் தாயகக்கோட்பாட்டை சிதைக்கும் வகையில் முல்லைத்தீவு, மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் எல்லைப்பகுதிகளில் மிகப்பெரும் அளவில் சிங்களக்குடியேற்றங்கள் இடம்பெறுவதுடன் வடக்கு கிழக்கின் ஏனைய எல்லா இடங்களிலும் அரசதிணைக் களங்கள் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டு எமது நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. இறுதி யுத்தத்தின் போது எமதுமக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள்




மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் ஆரம்பவிசாரணைகள் கூட இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக நல்லாட்சி என்ற முக மூடியை அணிந்து கொண்டு கடந்த 5 வருடங்களில் இந்த அரசாங்கம் இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் மேற்கொண்ட தீர்மானத்தை முற்றிலும் உதாசீனம் செய்துள்ளதுடன் எமது மக்களுக்கு எதிராக கட்டமைப்பு ரீதியானதும், கலாசாரரீதியானதுமான இனப்படுகொலையை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

யுத்தத்தில் ஈடுபட்டஎமது இளைஞர்களை நீண்ட காலமாக சிறைகளில் அடைத்து வைத்து தண்டனைக்கு உட்படுத்தி வருகின்றது. சாத்வீக வழிகளில் சிறைகளில் பலதடவைகள் உண்ணாவிரத போராட்டங்களை மேற்கொண்டும் அவர்களின் கோரிக்கைகள் செவிமடுக்கப்படவில்லை. சுமார் ஒரு லட்சம் வரையிலான இராணுவத்தினர் வடக்குகிழக்கில் நிலைகொண்டு நில அபகரிப்பு, சிங்கள குடியேற்றம் மற்றும் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளுக்கு ஆதரவும் பாதுகாப்பும் வழங்கிவருகின்றனர்.

இவற்றுக்கான எமது ஒட்டுமொத்த எதிர்ப்பையும் காட்டும் அதேவேளை சர்வதேசச் சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் இனப்படுகொலைக்கு எதிரான "எழுகதமிழ்" நிகழ்வு போன்ற நிகழ்வுகளை யாழ்ப்பாணம் உட்பட வடக்குகிழக்கின் முக்கிய இடங்களில் நாம் நடத்துவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகின்றேன். நில அபகரிப்பு நடவடிக்கைகள் அரச மயமாக்கப்பட்டு உச்சஅளவில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் காலதாமதம் இன்றி இந்த நிகழ்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்பது எனது கோரிக்கை. செப்டெம்பர் மாதத்தில் முதலாவது நிகழ்வை நடத்தலாம் என்று அபிப்பிராயப் படுகின்றேன்.

ஆர்ப்பாட்ட நிகழ்வுகளுடன் மட்டும் நின்றுவிடாமல் நிலஆக்கிரமிப்பு, பௌத்த மயமாக்கல்,சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் தகவல்கள் மற்றும் ஆதாரங்களைத் திரட்டி ஆவணப்படுத்தி அவற்றை வெளியீடு செய்யும் நடவடிக்கைகளிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும் என்று வேண்டிக்கொள்கின்றேன் என்றார்.

# கூட்டமைப்பு காலாவதியாகிவிட்டது

## தற்போதைய சூழலில் தவிர்க்க முடியாத தலைவர் விக்னேஸ்வரன்

**தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் சிறப்பு பேட்டி**



யுத்தத்திற்குப் பின்னரான நிலைமாறு கால அரசியலில் வடமாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் தமிழ் மக்கள் மத்தியில் தவிர்க்க முடியாத ஒரு தலைவராக இருப்பார் என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரும் வடமாகாண முன்னாள் அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் இலக்கு மின்னிதழுக்கு வழங்கியபேட்டியில்; இவ்வாறு தெரிவித்தார். பேட்டியின் இறுதிப்பகுதி வருமாறு,

கேள்வி: விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் யுத்தத்தின் ஈற்றில் சரணடையவில்லை என்று இராணுவத்தினர் கூறுகின்றமையை எப்படிப் பார்க்கின்றீர்கள்?

பதில்:— பொறுப்புக் கூறவேண்டிய அரசாங்கத் தரப்பே காணாமலாக்கப்பட்டவர்கள் என்று எவருமே இல்லை, அவர்கள் எல்லோரும் வெளிநாடுகளுக்குப் போய்விட்டவர்கள் என்று பொய்சொல்லும்போது, யுத்த விதிகளை மீறி யுத்தத்தின்போது பிடிபட்டவர்களையும், யுத்தத்தின் பின்பு சரணடைந்தவர்களையும் கொன்றொழித்த இராணுவம் உண்மையைப் பேசும் என்று நாம் எவ்வாறு எதிர்பார்க்கமுடியும்? தமது கணவன்மார்களையும், பிள்ளைகளையும் படையினரிடம் ஒப்படைத்த அவர்களது உறவினர்கள் இப்போதும் உயிருள்ள சாட்சியங்களாக இந்த மண்ணில்தான் இருக்கின்றார்கள்.

கேள்வி: யுத்தத்தின்போது சரணடைந்து காணாமல்போனவர்கள் உட்பட காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்து அடுத்தகட்டமாக எவ்விதமான நடவடிக்கைகளை எடுக்க முடியும்?

பதில்:— யுத்தம் முடிந்து பத்து வருடங்களாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களைத்தேடி அவர்களின் உறவினர்கள் கண்ணீரும் கம்பலையுமாக அலைந்து கொண்டிருக்கிறார்கள்.



உணவுத்தவிர்ப்புப் போராட்டம் உட்பட எல்லாவிதமான போராட்டங்களையும் நிகழ்த்திப் பார்த்துவிட்டார்கள். எல்லாத்தரப்பு அரசியல்வாதிகளின் கால்களில்கூட விழுந்து மன்றாடியும் பார்த்துவிட்டார்கள. இதுவரைக்கும் பொறுப்பான பதில் எவர்களிடமிருந்தும் கிடைக்கவில்லை. மன்னிப்போம் மறப்போம் என்று அரசு அசட்டை செய்கிறது. இனி இவர்களால் முன்னெடுப்பதற்கு வேறு போராட்டங்கள் எவையும் இல்லை. பார்ப்பதற்கு வேறு அரசியல்வாதிகளும் இல்லை. காணாமல் போனோருக்கான அலுவலகமும் தீர்வைப் பெற்றுத் தருவதாக இல்லை.

30:1 தீர்மானத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்து, உண்மையை வெளிக்கொணர வைத்து அரசாங்கத்திடம் இருந்து உரிய பரிகாரத்தைப் பெற்றுக்கொடுக்க எமது தலைவர்கள் தவறிவிட்டார்கள். தென்னிலங்கைப் பாராளுமன்ற அரசியல் நெருக்கடிகளின்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்குத் தமிழ் இனம்சார்ந்து எவ்விதபேரத்தையும் முன்வைக்காமல் ஆதரவளித்த எமது தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குறைந்தபட்சம் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாகவும் சிறையில் வாடுகின்ற அரசியல் கைதிகள் தொடர்பாகவும் பேரம் பேசியிருக்க முடியும். ஆனால் இவர்கள் அடுத்த தேர்தலில் தாங்கள் வெல்ல வேண்டும் என்பதில் மாத்திரம் குறியாக இருந்து கம்பெரலியாவை மாத்திரம் வாங்கி வந்திருக்கிறார்கள்.

கேள்வி: தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றான அணியொன்று அவசியம் என்பது குறித்து தங்களின் நிலைப்பாடு என்ன?




பதில்:— தமிழ்த் தேசிய கூட்டமைப்பு காலாவதியாகிவிட்டது. யுத்தத்திற்குப் பின்னர்; தமிழ் இனம் சார்ந்து அரசியலை முன்னெடுக்கத் தவறிவிட்டது. விடுதலை அரசியல் தேர்தல் அரசியல் போன்று இன்னகாலத்துக்குள் முடியுமென்று தீர்மானிக்க முடியாதது. இது தொடர் அஞ்சலோட்டம் போன்றது. முள்ளிவாய்க்காலில் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆயுத அலகு தோற்கடிக்கப்பட்டதன் பின்னர், அஞ்சலோட்டம் போன்று சனநாயக ரீதியாகப் போராட்டத்தை அடுத்தகட்டத்துக்கு முன்னெடுத்திருக்கவேண்டிய கடப்பாடு தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு இருந்தது. விடுதலைப் புலிகளே தங்களை உருவாக்கினார்கள் என்று சொல்லிக்கொள்ளும் கூட்டமைப்பு அந்தப் பணியிலிருந்து விலகிச்சென்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் விடுதலைப்புலிகள் இழைத்திருக்கக்கூடிய தவறுகளை அரசாங்கத்தின் போர்க் குற்றங்களுடன் சமப்படுத்தி சர்வதேச அரங்கில் அரசாங்கத்தைப் பிணையெடுத்தார்கள். அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத் தாக்குதல் விடுதலைப்புலிகள் உட்பட உலகெங்கிலும் உள்ள தேசிய இனங்களின் விடுதலைக்காக போராடுகின்ற அமைப்புகளுக்கு பாதகமாக அமைந்தது. அதே போன்று சித்திரையில் இடம்பெற்ற இஸ்லாமியப் பயங்கரவாதிகளின் ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்புத் தாக்குதல்கள் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தை சனநாயக ரீதியில் முன்னெடுப்பதற்குத் தடங்கல்களை ஏற்படுத்தியுள்ளது. 2009 இற்கு பின்னர், பத்து வருட காலத்துக்குத் தேவையற்ற விதத்தில் காலநீடிப்பை வழங்கித் தமிழ் மக்களுடைய இனப் பிரச்சினைக்கான தீர்வைப் பின்தள்ளியதுதான் தமிழ்க் கூட்டமைப்பு செய்த ஒரே சாதனை. மேற்குலகின் நலன்களுக்காக சனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஆகியோரின் வலிந்து ஓட்டப் போடப்பட்ட ஆட்சி அதிக காலம் நீடிக்காது என்பது சாதாரண பாமரமக்களுக்கும் தெரியும். ஆனால், இவர்கள் எந்தவித நிபந்தனையும் விதிக்காது ஆதரவு வழங்கி வந்துள்ளனர். கடைசியில், அரசாங்கம் நினைப்பது போன்றே அபிவிருத்தியினால் தமிழ் மக்களின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கலாம். என்ற நிலைக்குக் கீழ் இறங்கி கம்பெரலியாத் திட்டத்துடன் ஒழுங்கை ஒழுங்கையாக அலைந்து கொண்டிருக்கிறார்கள். இனப்பிரச்சினை தோற்றம் பெற்றதற்கான அரசியற் காரணிகள் இன்னமும் தீர்க்கப்படாமல் நீடித்திருக்கும் நிலையில் யுத்தத்திற்குப் பின்னரான தமிழ் அரசியலை முன்னெடுப்பதற்குத் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கான மாற்று ஒன்று அவசியமாகும்.

கேள்வி: யுத்தத்திற்கு பின்னரான தமிழ் அரசியலை முன்னெடுக்க வடக்கின் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் பொருத்தமானவர் என்று நீங்கள் கருதுகின்றீர்களா?

பதில்:— விக்னேஸ்வரன் அவர்கள் அவரது அரசியல் எதிரிகளால் அரசியல் தெரியாதவர், நிர்வாகம் தெரியாதவர், மாகாண சபையின் ஐந்து வருட பதவிக்காலத்தையும் வீணாக்கியவர்; என்று கடுமையாக விமர்சிக்கப்படுகிறார். பொதுமக்களால் நேர்மையானவர், உண்மைகளை இடித்துரைப்பவர், தமிழினம் சார்ந்து ஆணித்தரமாகப் பேசுபவர் என்று கருதப்படுகிறார். நான் ஐந்து வருடகாலம் மாகாணசபையின் உறுப்பினராக இருந்தவன் என்ற வகையில் இவர் எவ்வாறு அவரது பணிகளைச் செய்யவிடாது மாகாண சபைக்குரிய அதிகாரங்களைக் காட்டி அரசாங்கத் தரப்பாலும், அரசியல் காழ்ப்பால் உட்கட்சித் தரப்பாலும் தடுக்கப்பட்டார் என்பதை நான் நன்கு அறிவேன்.

அவர் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பாகத் தீவிரமான கருத்துகளை தெரி— வித்து வந்தமையும், மாகாணசபையில் தமிழின அழிப்புப் பிரேரணையை நிறைவேற்றியமையும், எங்கே இவர் மக்கள் மத்தியில் தங்களை மிஞ்சிப் பெரும் செல்வாக்கு பெற்று உயர்ந்து விடுவாரோ என்று தமிழ் அரசியல்வாதிகள் மத்தியில் எழுந்த அச்சமும் இவர் பணிகளுக்கு இடையூறாக அமைந்தன. என்னைப் பொறுத்தவரையில் இவர் யுத்தத்திற்குப் பின்னரான நிலைமாறு கால அரசியலில் தமிழ் மக்கள் மத்தியில் தவிர்க்க முடியாத ஒரு தலைவராக இருப்பார்.

# இனப்படுகொலை குறித்து மாகாணசபை தீர்மானம் கொண்டுவருவதை கூட்டமைப்பினர் தடுத்தார்கள்

## தமிழ் மக்கள் கூட்டணியின் அமைப்பாளர் இரா.மயூதரன்



இலங்கை அரசியலில் இணக்க அரசியலானது இனிமேல் ஒருபோதும் வெற்றியளிக்கப் போவதில்லை என வாகரை கதிரவெளி பிரதேச மக்களுடனான சந்திப்பின் போது தமிழ் மக்கள் கூட்டணியின் தொகுதி அமைப்பாளர் இரா. மயூதரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் அரசியல் செயற்பாடுகளை கிழக்கு மாகாணத்தில் வலுப்படுத்தும் நோக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தங்கியிருந்து முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமாகிய சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தலைமையில் மக்கள் சந்திப்புகளை மேற்கொண்டிருந்த போது வாகரை கதிரவெளி பிரதேச மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு பேசும்போது இரா.மயூதரன் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

உணர முடிகிறது. இந்த இடத்தில் தான் ஒரு விடயத்தை ஆணித்தரமாக கூறிக்கொள்ள விரும்புகிறேன். இணக்க அரசியலென்பது ஆயுத மௌனிப்பின் பின்னர் தோற்றுப்போய்விட்டது. 30 வருடங்களுக்கு மேலாக விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் போராட்டத்தில் இருந்து தமிழ் மக்களை பிரித்தெடுக்கும் தந்திரத்தின் அடிப்படையில் தான் துணை ஆயுதக் குழுக்களாக செயற்பட்ட ஈ.பி.டி.பி. ஐ அரவணைத்து சலுகை அரசியலை ஊக்குவித்தது அரசாங்கம். தமிழ் மக்களையும் முஸ்லீம்களையும் ஒன்று சேரவிடக்கூடாது என்பதற்காகவே முஸ்லீம் அரசியல் தரப்பை அரவணைத்து அமைச்சு பதவிகளை கொடுத்தது அரசாங்கம். இந்த நிலைமை ஆயுத மௌனிப்பிற்கு பின்னர் மாறிவிட்டதென்பதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணக்க அரசியலின் தோல்வி எடுத்துக்காட்டுகின்றது. டக்ளஸ் தேவானந்தாவோ முஸ்லீம் தரப்போ இணக்க அரசியல் மூலம் சாதித்தவற்றில் துரும்பளவையேனும் கூட்டமைப்பினரால் பெறமுடியாமல் போனமைக்கு இதுவே காரணம்.



அவர் மேலும் பேசுகையில்...

கிழக்கு மாகாண தமிழ் மக்கள் குறிப்பாக மட்டக் களப்பு, அம்பாறை மக்கள் முஸ்லீம் களினால் பல்வேறு வழிகளில் ஆக்கிரமிப் பிற்குள்ளாகி வருகின்றீர்கள். இந்த இக்கட்டில் இருந்து தப்புவதற்கு சிங்களவர்களுடன் கைகோர்த்தால் என்ன என்ற எண்ணத்தில் இருப்பதை அறிய முடிகிறது. நம்பி வாக்களித்த அரசியல் தலைமைகளும் கைவிட்ட நிலையில் இதை விட்டால் வேறு வழி இல்லை என்ற கையறு நிலையில் நீங்கள் நிற்பதை உணரமுடிகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடிபணிவு அரசியல் போக்கு காரணமாக கிழக்கு மாகாணத்தில் உள்ள நீங்கள் முஸ்லீம்களால் பாதிப்பை சந்தித்துக் கொண்டிருக்கின்றீர்கள். இவர்களிடம் இருந்து தப்புவதற்கு சிங்களர்களுடன் கைகோர்த்தால் என்ன என்ற எண்ணம் கிழக்கு மாகாண மக்களிடம் ஏற்பட்டு வருவதை அறியக்கூடியதாக உள்ளது. முதுகை சொறிந்தே ஆகவேண்டும் என்ற நிலையில் அடுப்பில் இருக்கும் நெருப்புக் கொள்ளியை தவிர வேறொன்றும் இல்லை. ஆகவே இருக்கிற கொள்ளிக்கட்டையில் தணல் குறைந்த கட்டை எது என்று பார்த்து அதனை எடுத்து முதுகை சொறிவதற்கு ஒப்பான நிலையில் நீங்கள் இருப்பதை

இணக்க அரசியல் மூலம் அரசுடன் ஒட்டி உறவாடிய தரப்புகள் இன்று அரசாலும் மக்களாலும் கைவிடப்பட்டவர்களாக இருப்பது எமக்கான பாடமாகும். தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் அவர்கள் குறிப்பிடுவதைப் போன்று நாம் கூட்டமைப்பிற்கு எதிரான அரசியலை முன்னெடுக்கவில்லை. இந்த நூற்றாண்டு கண்டிராத மாபெரும் இனப்படுகொலையுடன் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டது. முள்ளிவாய்க்காலில் நடந்தது மாபெரும் துயரம். ஆனாலும் அங்கு கொல்லப்பட்ட ஒன்றரை இலட்சம் தமிழர்களது உயிர்த்தியாகமானது விடுதலைப் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு கொண்டுசெல்லும் துரும்புச்சீட்டாக இருந்தது. உலகில் எத்தனையோ நாடுகளில் இது போன்ற பல பிரச்சினைகள் நடைபெற்று வருகின்ற போதிலும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் தமது பிரச்சினையை கொண்டு போகவே போராடிக்கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையில் முள்ளிவாய்க்காலில் கொன்று புதைக்கப்பட்ட எமது உறவுகளின் தியாகம் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை அரங்கிற்குள் எமது பிரச்சினையை தங்கத் தாம்பாளத்தில் வைத்து கொண்டுசேர்க்க உதவியது.

புலம்பெயர் தமிழர்களின் தீவிர போராட்டங் களும் வலுச்சேர்க்க நடந்தது இனப்படுகொலை தான் என உறுதிசெய்யும் வகையில் சர்வதேச



விசாரணைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டிய கூட்டமைப்பு அதனை கைவிட்டிருந்தது. வடக்கு மாகாண சபையில் நடந்தது இனப்படுகொலை தான் என்று தீர்மானத்தை கொண்டுவர முற்பட்டபோதுதான் முன்னாள் முதலமைச்சராக இருந்த சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுக்கும் கூட்டமைப்பு தலைமைக்கும் இடையே பிரச்சனை ஆரம்பமாகியது. இந்தா தீர்வு வருகிறது அந்தா தீர்வு வருகிறது என்று நல்லாட்சி என்ற பெயரிலான அரசிற்கு முண்டுகொடுத்துக் கொண்டிருந்த கூட்டமைப்பு தலைமை அந்த அரசிற்கு நெருக்கடியை ஏற்படுத்தும் இனப்படுகொலை தீர்மானத்தை வடக்கு மாகாண சபையில் கொண்டு வருவதை தடுத்தார்கள். அதனையும் மீறி நடந்தது இனப்படுகொலைதான் என்ற தீர்மானத்தை வடக்கு மாகாண சபையில் விக்னேஸ்வரன் ஐயா கொண்டுவந்திருந்தார். ஏற்கனவே 2011 ஆம் ஆண்டில் தமிழ் நாடு சட்ட மன்றத்தில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார் இறுதிப்போரில் நடந்தது திட்டமிட்ட இனப்படுகொலை. அதற்கு காரணமானவர்களை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என ஏழு கோடி தமிழர்களின் ஆட்சி மன்றமான தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி—யிருந்த நிலையில் வடக்கு மாகாண சபையில் கொண்டுவந்த தீர்மானத்தை முன்மொழிந்து இரண்டாவது தடவையாகவும் ஜெயலலிதா அம்மையார் தீர்மானத்தை கொண்டு வந்து சர்வதேச அங்கீகாரத்தை வழங்கியிருந்தார்.

அப்போது தமிழ் மக்களால் தேர்வு செய்யப்பட்ட கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒத்து நின்று நடந்தது இனப்படுகொலைதான் என்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அழுத்தம் கொடுத்திருந்தால் ஒரு வேளை இப்போது நாம் சுதந்திர தேசத்தில் இருந்திருப்போம். ஆம் நடந்தது இனப்படுகொலை என்று நிரூபணமானால் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் தமிழர்கள். தமிழர்கள் என்பதற்காகவே கொன்று குவித்தவர்கள் சிங்கள அரச படைகள். ஆகவே சர்வதேச தலையீட்டில் அந்த நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கும். இவ்வாறு தமிழ் மக்களாகிய எம்மால் தெரிவு செய்யப்பட்ட கூட்டமைப்பினர் தமிழர் விரோத நிலைப்பாட்டில் நின்று இந்த அரசுக்கு முண்டுகொடுத்து வரும் கையறு நிலையில் தான் தமிழ் மக்கள் கூட்டணி என்ற கட்சியை மதிப்பிற்குரிய விக்னேஸ்வரன் ஐயா தலைமையில் தொடங்க வேண்டியேற்பட்டது.

ஆகவே வடக்கு கிழக்கு என்ற வேறுபாடுகள் கடந்து தமிழர்கள் என்ற அடையாளத்தில் ஒன்றாக வேண்டியது கட்டாயமாகும். ஒரு கை தனித்திருந்தால் பலம் இல்லை. இரண்டு கைகளும் இணையும் போதுதான் பலமாகும். அதன் மூலம் சாதிக்கவும் முடியும். தமிழர்கள் என்ற அடையாளத்தில் ஒன்றாகி எமக்கான அரசியலை முன்னெடுக்க வருமாறு இரா.மயூதரன் அவர்கள் மேலும் தெரிவித்திருந்தார். இந்நிகழ்வில் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுடன் ஏனைய மத்தியகுழு உறுப்பினர்களும் பங்குபற்றி—யிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 2020ம் ஆண்டு சனாதிபதி தேர்தல்

## இந்தச் சூழ்நிலையை தமிழர்கள் எவ்வாறு தமக்குச் சாதகமாக்கலாம்?



அமைச்சர் கோத்தபாய ராஜபக்சவை களமிறக்கினால் கட்சிக்குள் பிளவு ஏற்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் முன்னாள் அமைச்சரும் சட்டநிபுணரும் பொதுசன முன்னணியின் தவிசாளருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கோத்தபாயவின் மேல் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்

**மூத்த அரசியல் ஆய்வாளர் பற்றிமாகரன்**

நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும் இதுவரை குற்றவாளியாகக் காணப்படாததினாலும் கோத்தபாய சுயமாகவே அமெரிக்கப் பிரகாவுரிமையையும் நீக்கியுள்ளதாலும் அவர் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்க எந்தத் தடையுமில்லை என வீரகேசரிக்கு அளித்த செவ்வியில் கூறியுள்ளார்.

கோத்தபாய அமெரிக்க பிரசையாக இருந்த காலத்திலேயே இலங்கைப் பிரசையாகவும் நாட்டிலிருந்து பாரிய சேவை ஆற்றியுள்ளார் எனப் பாராட்டியும் உள்ளார். சனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றவுடன் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தல் நடத்தவுள்ளதாகவும் பேராசிரியர் பீரிஸ் கூறியுள்ளார். தற்போதைய அரசாங்கம் முன் எடுத்த எந்த விடயத்தையும் தாம் கவனத்தில் எடுக்கப் போவதில்லை எனவும் புதிய சிந்தனை, புதிய ஆரம்பம் என்பதற்காகவே மக்கள் தமக்கு ஆணை தருகிறார்கள் எனவும் பேராசிரியர் பீரிஸ் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிப்பதா அல்லது மறுசீரமைவுகளைச் செய்வதா என்பதும் மக்களின் தீர்மானத்திற்கு அமைவாகவே தாங்கள் மேற்கொள்வார்கள் எனக் கூறிய பீரிஸ் அவர்கள் "மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் மனித உரிமை மீறல்கள் போர்க்குற்றச் சாட்டுக்கள் இடம்பெற்றமைக்கான சான்றுகள் வெளிப்படுத்தப்பட்டு ஜெனிவா தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் மீண்டும் ராஜபக்ச தரப்பினர் ஆட்சிக்கு வந்தால் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேருமல்லவா? என்று கேட்கப்பட்ட கேள்விக்கு " இவ்வாறான முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதும் இதுவரையில் எவையும் நிரூபிக்கப்படவில்லை. மனித உரிமைகளின் பெயரில் செயற்படும் நிறுவனங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து பணம் கிடைக்கிறது.

உதாரணமாக யஸ்மின் சுக்கா முன்னெடுக்கும் செயற்திட்டத்திற்கு பெரும் தொகை நிதி கிடைக்கிறது. இதனால் அந்தத் திட்டத்தை உயிர்ப்புடன் வைத்து தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டியுள்ளது. அதற்காக அவர்கள் பல விடயங்களைச் செய்வார்கள்" எனப்பதில் அளித்துள்ளமை சனாதிபதி தேர்தலின் பின்னர் எந்த அளவுக்கு மனித உரிமை மீறல்கள் போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து பொதுசன ஐக்கிய முன்னணி அலட்சியமாக நடந்து கொள்வார்கள் என்பதற்கு எதிர்வு கூறியுள்ளது.

மௌபிம ஜனதா கட்சி, இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி, தமிழ் ஐக்கிய சுதந்திர முன்னணி, ஈழவர் ஜனநாயக முன்னணி, முஸ்லிம் உலமாகட்சி, லிபரல் கட்சி, நவசிஹல உறுமய, ஜனநாயக தேசிய ஒன்றியம், ஐக்கிய லங்கா மகாகட்சி, பூமி புத்ரா கட்சி ஆகிய பத்துக்கட்சிகள் பொதுசன பெரமுனவில் இணைந்துள்ளன. ஆகஸ்ட் 11இல் முன்னாள் சனாதிபதியும் இந்நாள் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச பொதுசன முன்னணியின் உத்தியோக பூர்வமான தலைமையை ஏற்றுக் கொண்டு சனாதிபதி தேர்தலுக்கான பொதுசன முன்னணியின் சனாதிபதி வேட்பாளரையும் அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. கூடவே ஐக்கிய தேசியக்கட்சியும் மற்றைய சிங்களக் கட்சிகளும் தேர்தல் இணைப்புக்களை ஏற்படுத்துவதிலும் வெற்றி பெறக் கூடிய வேட்பாளர்களை இனங்காண்பதிலும் படுவேகமாக ஈடுபட்டுள்ளன.

ஆயினும் எல்லாச் சிங்களக் கட்சிகளுமே பொதுத்தன்மையாக 2020 இலங்கை சனாதிபதி தேர்தல் களத்தை வழமை போல் சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு பேரெழுச்சி கொடுக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளன. அதே வேளை சனாதிபதியின் பதவிக்காலத்தை நீடித்து சிங்களபௌத்த பேரினவாதத்தை மேலும் பலப்படுத்திய பின்னர் கூட்டாகத் தேர்தல்களம் காணலாமென்ற முயற்சிகளும் தொடர்ந்து நடைபெறுகின்றன.




சிங்கள பௌத்த பேரினவாதிகள் 1949 இல் இலங்கையின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்தி உலகச் சந்தையில் இலங்கை என்றொரு நாட்டிற்கு பொருளாதார முக்கியத்துவம் அளித்த மலையகத் தமிழர்களின் குடியுரிமையைப் பறித்து இலங்கைப் பாராளுமன்றத்தில் சட்டவாக்க அதிகாரத்தைத் தமதாக்கக் கூடிய வகையில் பாராளுமன்றச் சிங்களப் பிரதிநி—தித்துவத்தைப் பெருக்கிக் கொண்டனர். இதனை எதிர்த்து மலையகத் தமிழர்கள் மேற்கொண்ட சனநாயகப் போராட்டங்களை அலட்சியப்படுத்தி தமிழர்களின் சனநாயக வழிப்போராட்டங்களை கவனத்தில் எடுக்காத அரசியல் தந்திரோபாயத்தைத் சிங்கள அரசியலாகவே தொடக்கி வைத்தனர். தொடர்ந்து 1956இல் சிங்களம் மட்டும்



சட்டத்தைக் கொண்டு வந்து அனைத்துத் தமிழர்களும் அரசகட்டமைப்புக்குள் தொழில் செய்யும் உரிமையைப் பறித்து அரசின் நிர்வாகத்தைச் சிங்கள மயப்படுத்தினர். இதற்கு எதிராக அமைதிவழியில் தமிழர்கள் தொடங்கிய சனநாயகப் போராட்டங்களை வன்முறைப்படுத்தி நாட்டில் குழப்பநிலையைத் தோற்றுவித்து அதனைப் பயன்படுத்தி 150 தமிழர்களுக்கு மேல் திட்டமிட்ட முறையில் இனஅழிப்புச் செய்துதமிழர்களை இனங்காணக் கூடிய அச்சத்துக்குள்ளாக்கி கிழக்கில் தமிழர்களின் நிலங்களை வன்முறையில் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கும் போக்கைத் தொடக்கி வைத்து நில வளமும் நீர் வளமும் கொண்ட தமிழர் தாயகத்தின் கிழக்கு மாகாணத்தை அதிலும் குறிப்பாகத் தமிழர் தாயகத்தின் பெருநிலப்பரப்பான திருக்கோவில் அம்பாறை மாவட்டத்தைச் சிங்களக் குடியிருப்பாக்கி கையகப்படுத்தி அதன் விரிவாக்கமாகத் தமிழர் தாயகத்தின் முக்கிய துறைமுக நகரமான திருகோணமலை வரை சிங்களக் குடியேற்றங்களை குறுகிய காலத்தில் பல்லாயிரக்கணக்கில் பெருக்கினர்.

இந்தத் தமிழின அழிப்புத் திட்டத்தின் தொடர்ச்சியாக, கொழும்பை மையப்படுத்தி தமிழர்களின் வடக்கு கிழக்குக்கு வெளியே இருந்த வாழ்வாதாரங்களை பறித்தெடுக்கும் நோக்கிலும் தமிழின அழிப்பைத் திட்டமிட்ட முறையில் சிங்கள அரசுக்களின் அரசியல் தந்திரோபாயம் ஆக்கும் போக்கிலும் 1958இல் நடாத்திய பெருமளவிலான தமிழினப்படுகொலைகள் இலங்கைத் தமிழினத்தினை அச்சப்படுத்தி அவர்களின் அரசியல் பணிவைப் பெறும் தந்திரோபாயத்தை இலங்கை அரசுகள் தொடர வைத்தன.

1965ம் ஆண்டு முதல் 1970ம் ஆண்டு வரை தமிழர்களின் உயர்கல்வியை மறுக்கும் அல்லது குறைக்கும் வகையில் பல்கலைக்கழக அனுமதிக்கான தரப்படுத்தல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு தமிழ் இளம் தலைமுறையினரின் வளர்ச்சிகள் தடுக்கப்பட்டன. இதனை எதிர்த்து சனநாயகவழிகளில் போராடத் தொடங்கிய அரசியல் விழிப்புணர்வு பெற்ற தமிழர்களை காரணமின்றிக் கைது செய்தும் விசாரணையின்றித் தடுத்து வைத்துச் சித்திரவதை செய்தும் காவல்துறையினரை

தொடர்ச்சி 09 ஆம் பக்கம் →

8 ஆம் பக்க தொடர்ச்சி ➔

இராணுவத்தினராக மாற்றிப் பகைநாடொன்றில் ஊடுருவி அழிப்பது போல அப்பாவித் தமிழ் இளைஞர்களைக் கொன்றழித்தும் காணாமல் போகச் செய்தும் 1970கள் முதல் 1978 வரை வகைதொகையற்ற மனித அவலங்களை ஏற்படுத்தித் தமிழ் மக்களின் நாளாந்த வாழ்வை திட்டமிட்ட வகையில் முடக்கத் தொடங்கினர். சிங்களம் மட்டும் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட திரு கோடீஸ்வரன் அவர்கள் சோல்பரி அரசியல் அமைப்பின் மூலம் தமிழர்களின் இறைமையை இலங்கைப் பாராளுமன்ற ஒற்றையாட்சிக்கு உட்படுத்திய பொழுது பிரித்தானிய அரசு வழங்கிய 29(2) அரசியலமைப்புப் பாதுகாப்புக்கு கீழ் பிரித்தானியப் பிரிவிக்கவுன்சிலுக்கு மேன்முறையீடு செய்தார். அதனை ஏற்று பிரித்தானிய அதி உயர் நீதிமன்றமான பிரிவிக் கவுன்சில் சிங்களம் மட்டும் சட்டத்தை இலங்கைப் பாராளுமன்றம் மறுபரிசீலனை செய்யுமாறு பணித்து அவருக்கு அவர் வேலையில் இருந்து நீக்கப்பட்ட காலத்திற்கான சம்பளத்துடன் மீளவும் வேலை வழங்குமாறு நீதி வழங்கியது.

இதனை ஏற்க மறுத்து சிங்கள பௌத்த பேரினவாதம் தன்னைச் சிறிலங்காக் குடியரசு என தமிழர்களின் பாராளுமன்றப் பிரதிநிதிகள் பங்கேற்காத பாராளுமன்றத்திற்கு புறம்பான அரசியல் நிர்ணய சபை மூலம் 22.05.1972 இல் பிரகடனப்படுத்தி இலங்கைத் தமிழர்கள் மேலான் ஆக்கிரமிப்பு அரசை நிறுவிக் கொண்டது. இவற்றை சனநாயக வழிகளில் எதிர்த்த தமிழ் அரசியல் தலைமையாளரான எஸ்.ஜே. வி செல்வநாயகம் அவர்கள் தனது காங்கேசன்துறைப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை விட்டு விலகி அடையாளக் குடியொப்பம் நடாத்துவித்து 1975இல் அதில் ஒன்பதினாயிரத்திற்கும் அதிகமான மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்று பாராளுமன்றத்துக்கு வந்து தமிழர்கள் கால் நூற்றாண்டாக ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறைமையில் தாங்கள் பிரித்தானியர்களிடம்




இழந்த அரசியல் உரிமைகளை மீளப்பெற எடுத்த முயற்சிகள் முடியாமல் போனமையால் இனி தமிழர்களின் அரசியல் எதிர்காலத்தைத் தாங்களே தீர்மானிக்கும் சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தித் தங்களின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதாக உலகுக்கு அறிவித்து தமிழர்களின் உள்ளக சுயநிர்ண உரிமையை வாபஸ்பெற்று தமிழர்களின் வெளியக சுயநிர்ணய உரிமையை உலகுக்கு வெளிப்படுத்தினார்.

நாடற்ற தேசஇனமாக இலங்கைத் தமிழ் மக்கள் மாற்றப்பட்ட நிலையில் சிங்கள அரசாங்கம் தமிழர்களின் தாயகத்தை சனநாயகவழிகளில் ஏற்க மறுத்தால் வேறு எந்த வழிகளிலும் அதனை அடைவோம் என்ற தேர்தல் அறிக்கையுடன் 1977 தேர்தலை தங்கள் தாயகத்தை மீட்டெடுத்து மக்களாட்சியை நிலைப்படுத்துவதற்கான குடியொப்பமாகத் தமிழர்கள் அறிவித்து அதில் வெற்றியும் பெற்றனர். இந்த அரசியல் மாற்றங்களை ஆயுதபடைபலம் கொண்டு சிங்களப் பேரினவாத அரசு அழித்தொழித்த காலகட்டத்தில் தமிழ் மக்கள் குறிப்பாக தமிழ் இளம் சமுதாயம் 1970 முதல் 1978 வரை உயிர் உடமைகள் பாதுகாப்புக்காக ஆயுத



எதிர்ப்பை வெளிப்படுத்தக் கூடிய மக்கள் போராட்ட இயக்கங்களாக மாறி 1978இல் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினைத் தமிழர்களின் பாதுகாப்புக்கான தலைமை இயக்கமாகக் கொண்டு தமிழர்கள் வாழவேண்டிய வரலாற்றைச் சிங்கள அரசுக்கள் உருவாக்கின.

இந்தச் சூழலில்தான் 1958இல்தொடக்கப்பட்ட தமிழின அழிப்பின் வெள்ளிவிழாவாக 1983இல் இலங்கையில் சிறிலங்கா அரசின் ஆதரவுடன் சிங்கள பௌத்த பேரினவாதிகள் 2000க்கும் மேற்பட்ட தமிழர்களை இனஅழிப்புக்கு உள்ளாக்கி வடக்கு கிழக்குக்கு வெளியே வாழ்ந்த தமிழர்களின் மேலான இனத்துடைப்பு முயற்சிகள்வழியாக பல மில்லியன் மதிப்புள்ள பொருள்இழப்புக்களையும் தமிழர்களுக்கு ஏற்படுத்தி அவர்களின் தொழில் செய்யும் உரிமையினை மறுத்து அவர்களை வடக்கு கிழக்குக்கு விரட்டியடித்து வடக்கு கிழக்குதான் தமிழர்களின் தாயகம் என்பதை வெளிப்படுத்திக் கொண்டனர். கொடிய தமிழின அழிப்பு நடந்து கொண்டிருந்த நேரத்தில்தான் இலங்கையின் சனாதிபதியாக இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா 1983 இனஅழிப்பின் பொழுது பிரித்தானிய ஊடகவியலாளர் இயன்போர்ட்டிற்கு "நான் யாழ்ப்பாண மக்களின் (தமிழர்) கருத்துக் குறித்து கவலை அடையவில்லை. நாங்கள் அவர்கள் குறித்துச் சிந்திக்க முடியாது. அவர்களின் வாழ்க்கை அவர்களின் கருத்து குறித்துக் கவலைப்பட முடியாது. வடக்கின் மீது நாங்கள் எவ்வளவு அழுத்தங்களைக் கொடுக்கின்றோமோ அந்த அளவுக்குச் சிங்கள மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள். நான் தமிழ் மக்களைப் பட்டினி போட்டால் சிங்கள மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள்" என்றார். இதுவே அன்று தொட்டு இன்று வரை சிங்களத் தலைமைகளின் தொடர்ச்சியான நிலைப்பாடாக உள்ளது என்பதற்கு இன்று பொதுசன முன்னணியின் தவிசாளரான பேராசிரியர் ஜி எல் பீரிஸ் இன்று தமிழர்களுக்காகக் குரல் எழுப்பும் உலகின் மனச்சாட்சியுள்ள மனித உரிமை ஆர்வலர்கள் குறித்த வீரசேகரிப் பேட்டி மீளவும் நிரூபிக்கிறது.

இந்நிலையில் இலங்கையில் தமிழர்கள் தங்களின் தொன்மையும் தொடர்ச்சியுமான இருப்புநிலையான தாயகம், தேசியம், தன்னாட்சி என்பதனைத் தக்கவைப்பதற்கான அரசியல் விழிப்புணர்வைத் தங்களின் பாதிப்புற்றுள்ள குரலை எவ்வாறு ஒலிக்கச் செய்வதற்குத் தேர்தல் களத்தில் ஒற்றுமையுடனும் ஒருமைப்பாட்டுடனும் செயற்படலாம் எனச் சிந்திக்க வேண்டிய நேரமாக அமைகிறது.

உலகநாடுகளில் அந்த அந்த நாடுகளின் சிறுபான்மையினமாகவும் புலம்பெயர் மக்களாகவும் உள்ள தமிழர்கள் உடனடியாகவும் உறுதியாகவும் தாங்கள் வாழும் நாடுகளின் மக்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் கட்சிகளின் தலைவர்களுக்கும், மனிதஉரிமை மற்றும் மனிதநல அமைப்புக்களுக்கும் இலங்கையின் சனாதிபதி தேர்தல் நடைபெறலாமென்ற உத்தேச நிலை—யிலேயே தமிழர்களுக்கு நடைபெற்ற மனித உரிமை மீறல்களும் யுத்தக் குற்றச் செயல்களும் குறித்த அனைத்துலக அக்கறைகளை கேலிபண்ணும் சிறிலங்கா அரசியல்வாதிகளின் பொறுப்பற்ற இனவெறி மதவெறிப் பேச்சுக்களையும் வெளிப்படுத்தித், தொடருகின்ற இனக்காணக்கூடிய அச்சங்களைக், குறித்த தகவல்களையும் புள்ளிவிபரங்களையும் சான்றாதாரங்களுடன் செய்திப்படுத்தி இவை குறித்த அனைத்துலக விசாரணைகளை வேகப்படுத்துமாறும், எதிர்காலத்தில் இலங்கையில் தமிழரின் மனித உரிமைக்கு எதிரானவன் முறைச் செயற்பாடுகள் நடைபெறாதவாறு அனைத்துலக அழுத்தங்களையும் தலையீடுகளையும் மேற்கொள்ளுமாறும் கேட்க வேண்டும். இதற்கான புலம்பெயர் தமிழர்களின் மனித மூலவளம் சிதறிப் போகாதவாறு புலம்பெயர் தமிழர்களின் மனித உரிமை மற்றும் அமைதிக்காக இதுவரை உழைத்து வரும் அனைத்துத் தமிழர்களையும் ஒருங்குபடுத்தி அவற்றின் தனித்துவங்களைப் பேணிய நிலையில் ஒரு பொதுக்கொள்கைக்குக் கீழ் வழிப்படுத்தும் ஈழத்தமிழர்களின் மக்கள் அமைப்பு ஒன்று விரைவாகவும் அறிவார்ந்த நிலையில் உணர்ச்சிகளைக் கடந்து உணர்வுடன் சனநாயக வழிகளிலும் அனைத்துலக நாடுகள் மற்றும் அமைப்புக்களுடனான உரிய தொடர்புகளுடனும் செயற்படுத்தப்பட வேண்டும்.

இந்நோக்கங்கள் உடன் கடந்த ஒருஆண்டாக ஆரம்பநிலையில் முயன்று வரும் ஈழத்தமிழர் உரிமைப் பாதுகாப்பு மையம் இவ்விடயத்தில் சரியானதைச் சரியாகச் செய்து தமிழர்களின் வினைத் திறனையும் விளை திறனையும் பெருக்க வேண்டிய நேரமிது. இன்று அனைத்துலக விவகாரமாக இலங்கை சனாதிபதி தேர்தல் மாறியுள்ள நிலையில் வேகமுடனும் விவேகமுடனும் ஒற்றுமையுடனும் செயற்பட்டு இனஅழிப்புக்கான நீதியையும், காணாமல் போனவர்களுக்கான பொறுப்புக் கூறலையும், தாயக மக்களுக்குக் பெற்றுக் கொடுக்க வேண்டியது புலம்பெயர் தமிழர் வரலாற்றுக்கடமையாக உள்ளது.




# பாராளுமன்றத்தில் நடந்த ஒரு 'பிரேத பரிசோதனை'

பூமிகன்

புதிய அரசியலமைப்பைத் தயாரிக்கும் முயற்சிகளுக்குப் புத்துயிரளிக்க கூட்டமைப்பின் தலைவர்களான சம்பந்தனும், சுமந்திரனும் முற்பட்ட அதற்கு ஏற்கனவே சமாதி கட்டப்பட்டு விட்டது என்பதை ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருக்கின்றார். இந்த நிலையில், கடந்த வாரம் பாராளுமன்றத்தில் நடைபெற்றது புதிய அரசியலமைப்பு மீதான ஒரு பிரேத பரிசோதனையாகவே இருந்தது. இதனைக் கொன்றது யார்? அதற்கு எவ்வாறு சமாதி கட்டப்பட்டது என்பதையிட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் கடுமையாக வாதிட்டுள்ளார்கள்.

"இரண்டு வருடங்களில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு" என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் வைத்து இரு வாரங்களுக்கு முன்னர் தெரிவித்ததில் தெளிவான செய்தி ஒன்று பொதிந்திருந்தது. கடந்த மூன்று வருட காலமாக இடம்பெற்று, குற்றுயிராக — கோமா நிலையில் கிடந்த புதிய அரசியலமைப்பைத் தயாரிக்கும் முயற்சிக்கு சமாதி கட்டப்பட்டுவிட்டது என்பதுதான் அது. இன்னும் நான்கு மாதங்களில் சனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. அது முடிந்து சில மாதங்களில் பொதுத் தேர்தல் நடைபெறும். ஆக, இதற்கு முன்னதாக அரசியலமைப்பைத் தயாரிக்கும் முயற்சிளுக்குப் புத்துயிர் கொடுக்க முடியாது. இந்த நிலையில் இன்னும் இரண்டு வருடங்களில் தீர்வு என பிரதமர் கூறியிருப்பது ஒரு புறம் அடுத்த தேர்தலை இலக்கு வைத்த வாக்குறுதியாக இருந்தாலும், மறுபுறத்தில் தற்போதைய அரசியலமைப்பாக்க முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது என்பதை மறைமுகமாக அறிவிப்பதாகவும் அமைந்திருந்தது.

புதிய அரசியலமைப்பைத் தயாரிக்கும் பாராளுமன்ற வழிநடத்தல் குழுவுக்கு ரணில்தான் தலைமை தாங்கினார். அதற்கான செயலகத்துக்குப் பொறுப்பாக கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ணவும், சுமந்திரனும் இருந்தார்கள். ஆக, அரசியலமைப்பாக்க முயற்சிகளுக்கு சமாதி கட்டப்பட்டுவிட்டது என்பது இவர்களுக்குப் புரியாமலிருக்காது.

பிரதமர் இந்த அறிவித்தலை வெளியிட்ட பின்னணியில், "புதிய அரசியலமைப்புக்கு என்னதான் நடந்தது?" என்பதைக் கேள்விக்குட்படுத்தும் வகையில் பாராளுமன்ற விவாதம் ஒன்றும் நடைபெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டுவந்த விஷேட கவனயீர்ப்புப் பிரேரணையையடுத்து வியாழன் வெள்ளி என இரண்டு நாட்களுக்கு இந்த விவாதம் இடம்பெற்றது. இந்தப் பிரேரணையின் மூலம் அரசியலமைப்பைத் தயாரிக்கும் முயற்சிகளுக்குப் புத்துயிர் கொடுப்பதற்கே கூட்டமைப்பு முயன்றதாகத் தெரிகின்றது. ஏனெனில் கூட்டமைப்புக்கு அது தேவையாக இருந்தது. அடுத்தமாதம் புதுடில்லி செல்வதற்கு கூட்டமைப்பு திட்டமிடுகின்றது. அரசியலமைப்பைத் தயாரிக்கும் முயற்சிகள் ஒன்றுமே இல்லை — தேர்தல் தயாரிப்புக்கள்தான் நடைபெறுகின்றது என்றால், அங்கு சென்று பேசுவதற்கு எதுவுமே கூட்டமைப்புக்கு இருக்காது. அதனைவிட, புதிய அரசியலமைப்பில்தான் கூட்டமைப்பு தனது அரசியல் முதலீடுகளைச் செய்திருக்கின்றது. அதற்குச் சமாதி கட்டப்பட்டுவிட்டது என்றால், தேர்தலுக்கு முகங்கொடுக்கும் போது மக்களை எதிர்கொள்ள கூட்டமைப்பிடம் எதுவும் இருக்கப்போவதில்லை. அதனால்தான் இந்த விவாதத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது.

கூட்டமைப்பின் எதிர்பார்ப்பு என்னவாக இருந்தாலும், அரசியலமைப்பு குறித்த ஒரு பிரேத பரிசோதனைதான் இரண்டு நாட்களாகப் பாராளுமன்றத்தில் இடம்பெற்றது எனச் சொல்லலாம். கூட்டமைப்பினரைப் பொறுத்தவரையில் இங்கு அவர்கள் காராசாரமாக நிகழ்த்திய உரைகள், மக்கள் மத்தியில் தமக்கான ஆதரவுத் தளத்தைத் தக்க வைப்பதற்குப் போதுமானது என அவர்கள் நம்பலாம். ஆனால் மக்களைப் பொறுத்தவரையில், அதனை அவர்கள் நம்பத் தயாராகவில்லை. கடந்த மாதம் கூட ரணிலைப் பாதுகாத்தவர்கள் இப்போது வீராவேசமாகப் பேசுவதை நம்புவது எப்படி என்பதுதான் அவர்களுடைய கேள்வி!

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வழமைபோல ஆக்ரோஷமாக ஒன்றரை மணிநேரம் பேசினார். "புதிய அரசியலமைப்பு தொடர்பாகவும் அதிகார பரவலாக்கம் குறித்தும் அரசாங்கம் உள்நாட்டுக்கும் சர்வதேசத்திற்கும் அளித்த வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றவில்லை. இந்த நிலைமை தொடர்ந்தால் சர்வதேச மட்டத்தில் எமது நாடு நம்பிக்கையற்றதொன்றாகிவிடும். புதிய அரசியலமைப்பு தயாரிப்புக்காக முன்மொழியப்பட்ட பிரேரணைகளை எடுத்துக்கொண்டு பிளவுபடாத நாட்டுக்குள் முறையான தீர்வொன்றை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் விரைவாக செயற்படவேண்டும். இல்லாவிட்டால் இந்த அரசாங்கம் தொடர்ந்து பயணிக்க முடியாதநிலை ஏற்படும்" என்பது சம்பந்தனின் எச்சரிக்கை. சம்பந்தன் இவ்வாறு எச்சரிப்பதும் பின்னர் ரணிலுடன் பேரம் பேசி ஆதரவளிப்பதும் வழமையானது என்பதால் அதனையாரும் சீரியஸாக எடுத்துக்கொள்ளவில்லை.

அரசாங்கம் தனது பயணத்தின் இறுதிக்கு வந்துவிட்டது. இன்னும் சில மாதங்களில் மாற்றங்கள் வரப்போகின்றது. அரசியலமைப்பை உருவாக்கும் பணியின் ஆரம்பத்தில் சொல்லி—யிருக்க வேண்டியதை இறுதிக் காலத்தில் சொல்வதன் மூலம் சம்பந்தனால் எதனையும் சாதிக்க முடியாது என்பது அவருக்கும் தெரியும். அரசியலமைப்பு பணி ஆரம்பமாவதற்கு முன்னரே, அதாவது 2015 இலேயே, "அடுத்த வருடத்தில் தீர்வு" என நம்பிக்கை வெளியிட்டவர் சம்பந்தன். கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், "தமிழர் பிரதேசங்களில் அபிவிருத்திகளைச் செய்வது, அவர்களுக்கு அரசியல் அதிகாரத்தை வழங்குவதற்குப் பதிலீடாகாது. புதிய அரசமைப்பைக் கொண்டுவராவிட்டால் நாடு இதுவரை சந்தித்திராத பேரழிவை எதிர்கொள்ளும். 70 ஆண்டுகளாக நாங்கள் தீர்வைப் பெற முயல்கிறோம். எங்களால் இயன்ற முழு ஒத்துழைப்பை வழங்கியுள்ளோம். எங்களுக்கு தேவை என்றபடியால் தான் நாங்கள் உச்சபட்ச ஒத்துழைப்பு மற்றும் விட்டுக்கொடுப்பை வழங்கியுள்ளோம். பிரதமரும் அரசும் தங்களின் பொறுப்பில் இருந்து நழுவி விட முடியாது" எனத் தெரிவித்தார்.

அரசாங்கம் இவ்வாறுதான் செயற்படும் என்பதற்கு இலங்கையின் வரலாற்றில் 70 ஆண்டு கால அனுபவம் உள்ளது. எழுத்து மூலமாகக் கொடுத்த வாக்குறுதிகளையே கிழித்தெறியும் அரசாங்கங்களை நாம் கண்டுவந்திருக்கின்றோம். தந்தை செல்வாவுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் இரண்டு தடவைகள் மீறப்பட்டன. மூன்று சந்தர்ப்பங்களில் மட்டும்தான் அதிகபட்சமான தீர்வுக்கு இலங்கையின் அரசாங்கங்கள் இறங்கிவந்திருந்தன. ஒன்று — இந்தியாவின் அழுத்தத்தால் உருவான 13 ஆவது திருத்தம். இரண்டு — உள்ளக சுயாட்சிக்கு இணங்கிய ஒஸ்லோ உடன்படிக்கை, மூன்று சந்திரிகா தயாரித்த பிராந்தியங்களின் ஒன்றியம். இந்த மூன்று சந்தர்ப்பங்களிலும் விடுதலைப் புலிகளின் பலம் அரசாங்கத்தை பணியவைத்தது. 87 இல் இந்தியாவின் தலையீடு 13 ஆவது திருத்தத்துக்கு காரணமாக இருந்தது என்றும் சொல்லலாம். அதாவது ஆயுத பலம் அல்லது, வெளிநாட்டு அழுத்தம்தான் அரசாங்கத்தைப் பணியவைக்கும். இல்லையெனில் பேரினவாத நிலைப்பாட்டில்தான் அரசு செல்லும். சிறீலங்கா அரசாங்கம் என்பது நன்கு கட்டமைக்கப்பட்ட பௌத்த — சிங்கள கடும்போக்கால் நிறுவன மயப்படுத்தப்பட்ட ஒன்று. 2015 தேர்தலின் போது சம்பந்தனுக்கு கொடுத்த வாக்குறுதிக்காக சனாதிபதியும், பிரதமரும் புதிய அரசியலமைப்பைக்கொண்டுவந்து இன நெருக்கடிக்குத் தீர்வைத் தருவார்கள் என யாராவது நம்பியிருந்தால் அவர்கள் வரலாற்றைப் படிக்காதவர்களாக இருக்க வேண்டும். புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டபோதே, அதன் முகவுரையில் அதிகாரப்பரவலாக்கல் என்ற பதம் நீக்கப்பட்டது. அப்போதே இந்த ஆட்சியில் தீர்வு கிடைக்கப்போவதில்லை என்பது வெளிப்படையாகியது. அப்போதே உசாரடைந்து அதற்கேற்ற உபாயங்களை கூட்டமைப்புத் தலைமை வகுத்திருக்க வேண்டும்.

கல்முனை விவகாரத்தில் கூட்டமைப்புத் தலைமைக்கு கொடுத்த வாக்குறுதியைக்கூட அரசாங்கம் காப்பாற்றவில்லை. ஆனால், கூட்டமைப்பின் வாக்குகளால் அரசு நம்பிக்கையில்லாப் பிரேரணையிலிருந்து தப்பியது. அந்த ஒரு சிறிய பிரச்சினைக்கே தீர்வு கிடைக்கவில்லை. கன்னியா, செம்மலை விவகாரங்கள் நீதிமன்றத்துக்குச் செல்கின்றன. இவற்றுக்குக் கூட அரசியல் ரீதியிலான தீர்வு இல்லை. இந்த நிலையில், இனநெருக்கடிக்கு அரசாங்கம் நியாயமான தீர்வைத் தரும் என கூட்டமைப்பு நம்பிக்கொண்டிருக்கின்றதா? கூட்டமைப்புக் கோரிய விவாதத்துக்குப் பதிலளிக்கக்கூட பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் யாரும் சபையில் இருக்கவில்லை. சம்பந்தன் பேசிய போது சபையில் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே இருந்தார்கள்.



அரசியலமைப்பு குறித்த இந்த விவாதம் — அல்லது பிரேத பரிசோதனை இரண்டு விடயங்களைத் தெளிவாக்கியிருக்கின்றது. ஒன்று — சிங்களக் கட்சிகள் எவற்றுக்குமே இன நெருக்கடிக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் அக்கறை இல்லை. இரண்டு — அதனைத் தெரிந்து கொண்டும் பாராளுமன்ற ஆக்ரோச உரைகளின் மூலம் இழந்து போன தமது ஆதரவுத் தளத்தைக் கட்டியெழுப்பவும், தமது தவறுகளுக்கான பொறுப்பை அரசாங்கத்தின் தலையில் போட்டுவிடுவதற்கும் கூட்டமைப்பு முயன்றுள்ளது.

# உலகம் எங்கும் இடம்பெற்ற கறுப்பு யூலை 36 வது வருட நினைவேந்தல் நிகழ்வுகள்







யாழ் பல்கலைக் கழகத்தில்








பிரித்தானிய பிரதமர் வாசத்தலத்திலே





ஜேர்மனியிலே





பிரான்ஸ்-பாரிஸ் நகரில்






பிரான்ஸ்-ஸ்ராஸ்பூர்க் நகரில்

# ஹொங்கொங்கில் அரசுக்கு எதிராக மீண்டும் போராட்டம்



ஹொங்கொங்கில் மீண்டும் நேற்றைய தினம் போராட்டம் ஆரம்பமாகியுள்ளது. இந்த போராட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்காரர்களை கலைப்பதற்காக காவல்துறையினர் கண்ணீர் புகைக்குண்டுத் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்த போராட்டத்தின் போது 45 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளி—யிட்டுள்ளன. ஏழு வாரங்களாக அரசாங்கத்திற்கு எதிரானதும் சனநாயகத்திற்கு ஆதரவானதுமான போராட்டங்கள் பல ஹொங் கொங்கில் நடைபெற்றுள்ளன.

குற்றவாளிகளை சீனாவிடம் ஒப்படைக்கக்கூடிய சட்டத்திருத்தம் காரணமாக அங்கு தொடர்ச்சியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. கடந்த வாரம் சனநாயக ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை கண்டித்து, வடக்கு மாவட்டமான யுவான் லாங் வழியாக நேற்றைய தினம் ஆர்ப்பாட்டக்காரர்கள் பேரணியாக சென்றனர். காவல்துறை—யினர் எதையும் கண்டு கொள்ளாமல் தாக்குதலாளிகளுடன் கைகோர்ப்பதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது குற்றம் சுமத்தியிருந்தனர். எனினும் இந்த குற்றச்சாட்டுக்களை காவல்துறையினர் மறுத்து வருகின்றனர். இந்த போராட்டங்களினைத் தொடர்ந்து குறித்த சட்டத்திருத்தம் கைவிடப்பட்டது. எனினும்,காவல்துறை—யினரால் மேற்கொள்ளப்பட்ட வன்முறை, உள்நாட்டு சீர்திருத்தம் மற்றும் ஹொங் கொங்கின் நிர்வாக தலைவர் கேரி லெம் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை—யினை முன்வைத்தே இந்த போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## அமெரிக்க பெண் எம்.பி. கூகுள் நிறுவனம் மீது வழக்கு



அமெரிக்க நாடாளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்து பெண் என்ற பெருமைக்கு சொந்தக்காரரான துளசி கப்பார்ட் அடுத்த ஆண்டு நடைபெறும் சனாதிபதி தேர்தலில் சனநாயக கட்சி வேட்பாளராக களம் இறங்க விருப்பம் தெரிவித்துள்ளார். சனநாயக கட்சியினரின் ஆதரவை பெறுவதற்காக துளசி கப்பார்ட் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். மேலும் இந்த பிரசாரத்தின் மூலம் அவர் நிதி திரட்டியும் வருகிறார். இந்தநிலையில் துளசி கப்பார்ட்டின் பிரசாரம் குறித்த தகவல்களை விளம்பரப்படுத்துவதற்காக அவரது பிரசார குழு கூகுளில் விளம்பர கணக்கு ஒன்றை தொடங்கி நிர்வகித்து வந்தது.

இந்த விளம்பர கணக்கை கடந்த மாதம் 27, 28 ஆகிய திகதிகளில் 6 மணி நேரத்துக்கும் மேலாக கூகுள் நிறுவனம் முடக்கியதாக கூறப்படுகிறது. தகுந்த காரணம் இன்றியும், எவ்வித முன்னறிவிப்பு இன்றியும் விளம்பர கணக்கு முடக்கப்பட்டதாக துளசி கப்பார்ட் குற்றம் சாட்டினார். இந்தநிலையில் இந்த விவகாரம் தொடர்பாக 50 மில்லியன் அமெரிக்க டாலர் (இந்திய மதிப்பில் ரூ.344 கோடியே 61 லட்சத்து 75 ஆயிரம்) இழப்பீடு கேட்டு கூகுள் நிறுவனத்தின் மீது துளசி கப்பார்ட் வழக்கு தொடர்ந்துள்ளார்.

## உயிர் பிரியும் நேரத்தில் தங்கையைக் காப்பாற்றிய 5 வயதுச் சிறுமி

சிரியாவில் அரச படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றுவருகின்றது. இதனால் பொதுமக்கள் நூற்றுக்கணக்காக உயிரிழக்கின்றனர்.

இந்நிலையில், விமானத் தாக்குதல் ஒன்றில், அகப்பட்டு இறக்கும் தருவாயில் கூட தங்கையின் உயிரை காப்பாற்றிய 5 வயது சிறுமியின் செயல் காண்போரை கண்கலங்க வைத்துள்ளது. கடந்த புதன்கிழமை இட்லிப் மாகாணத்திலுள்ள அரிஹா என்ற பகுதியில் கிளர்ச்சியாளர்களை இலக்குவைத்து அரச படைகள் வான்வழித் தாக்குதலை நடத்தின. இந்த தாக்குதலில் அரிஹா பகுதியிலிருந்த 5 மாடிக் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்தது.

அப்போது, அம்ஜத்அல் அப்துல்லா என்பவரது வீடும் தாக்குதலுக்கு இலக்கானது. இதில் வீட்டில் இருந்த அப்துல்லா மற்றும் அவரது மனைவி ஆஸ்மா ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். அப்போது இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த அவர்களது 5 வயது மகள் ரிஹாம் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார். அந்தநிலையில், இடிபாடுகளில் சிக்கிய தனது 7 மாத தங்கையான துகா கீழே விழுந்துவிடக்கூடாது என்பதற்காக அவரின் சட்டையை இறுக்கமாக பிடித்துக்கொண்டார். இதனால் அந்தக் குழந்தை கீழே விழாமல் காயங்களுடன் உயிர் தப்பியது.



ஆனால், தங்கையைக் காப்பாற்றிய சிறுமி ரிஹாம் பரிதாபமாக உயிரிழந்தார்.

## தடுப்பூசி போடாத குழந்தைகளின் பெற்றோருக்கு அபராதம்

ஜேர்மனியில் அம்மை நோய்க்கான தடுப்பூசி போடாத குழந்தைகளின் பெற்றோருக்கு அபராதம் விதிக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஜேர்மனிய சுகாதாரத்துறை அமைச்சரினால் இந்த எச்சரிக்கை



விடுக்கப்பட்டுள்ளதாக ஜேர்மன் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஜேர்மனியில் மண்ணன் அல்லது மணல்வாரி எனப்படும் measles நோய் மீண்டும் அதிகம் பரவலாம் என்ற அச்சம் உருவாகியுள்ள நிலையிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தடுப்பூசி போடாத பாடசாலை செல்லும் வயதுடைய பிள்ளைகளின் பெற்றோருக்கு அபராதம் விதிக்கப்படும் எனவும் ஜேர்மனிய சுகாதாரத்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தங்கள் பிள்ளைகளுக்கு மணல்வாரி நோய்க்கு தடுப்பூசி போட்டதை நிரூபிக்க முடியாத பெற்றோருக்கு 2,500 யூரோக்கள் வரை அபராதம் விதிக்கப்படும் எனவும் அவர் இதன்போது எச்சரிக்கை விடுத்துள்ளார் இதேவேளை, ஜேர்மனியில் இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் மணல்வாரி அம்மையால் பாதிக்கப்பட்ட 400 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளமைக் குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் அமெரிக்காவில் மரண தண்டனை அமுல்

அமெரிக்காவில் 16 ஆண்டுகளுக்கு பின் மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது. அமெரிக்காவில் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படுவது கடந்த 2003ம் ஆண்டு நிறுத்தி வைக்கப்பட்டது. இப்போது 16 ஆண்டுகளுக்கு பின்னர் அமெரிக்காவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட உள்ளதாக அந்நாட்டு நீதித்துறை தெரிவித்துள்ளது. அட்டார்னி ஜெனரல் வில்லியம் பார் வெளி யிட்டுள்ள அறிக்கையில், ஏற்கனவே மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ள 5 கைதிகளுக்கு தண்டனையை நிறைவேற்றுமாறு சிறைச்சாலை பணியகத்தை கேட்டுக்கொண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

விரைவில் மரண தண்டனை நிறைவேற்றப்படவுள்ள அந்த 5 கைதிகளும் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் தொடர்பான கொலை, பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள். 5 கைதிகளுக்காக மரண தண்டனையை வரும் டிசம்பர் மற்றும் அடுத்தாண்டு சனவரி மாதத்தில் நிறைவேற்றுவதற்கு தேதி குறிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அரசின் இந்த நடவடிக்கைக்கு மனித உரிமை ஆர்வலர்களும், சனநாயக கட்சியை சேர்ந்த மூத்த தலைவர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்து உள்ளனர். மரண தண்டனை ஒழிக்கப்படவேண்டும் என அவர்கள் வலியுறுத்தி இருக்கிறார்கள்.

யானை ஒன்றிற்கு அதன் மிக பெரிய உடலைப் பொறுத்து ஒரு நாளைக்கு 200 கிலோவிலிருந்து 250 கிலோ உணவு தேவைப்படும். இது ஒரு நாளுக்கு 50 கிலோ அளவிற்கு சாணியிடும். ஆபிரிக்க நாட்டில் உள்ள போட்ஸ்வனா என்னும் ஊரில் மிக அதிகப்படியான ஆபிரிக்க யானைகள் வாழ்கின்றன. அவற்றின் எண்ணிக்கை தற்போது ஒரு லட்சத்து முப்பது ஆயிரத்தை (1,30,000) தாண்டி விட்டது. அவற்றின் மூலம் சுமார் அறுபத்துஐந்து லட்சம் (65,00,000) கிலோ யானையின் சாணம் தினமும் கிடைக்கிறது. இந்த மிகப் பெரிய அளவு சாணியை

# யானைச் சாணத்திலிருந்து கிடைக்கும் நன்மைகள்



எப்படி மாற்று வழியில் உபயோகித்து தீர்ப்பது என அந்நாட்டின் அரசாங்கம் ஒரு ஆராய்ச்சி செய்து, யானை சாணியின் மூலம் பிற உபயோகமான விடயங்களுக்கு மாற்றுவதற்கு சில குறிப்புகள் கொடுத்திருக்கிறது. அவற்றை பற்றி இங்கே காண்போம்.

### கொசு விரட்டி:

யானையின் சாணி ஒரு சிறந்த கொசு விரட்டியாக செயல்படுகிறது. வறட்டி ஆக்கப் பட்ட யானை சாணியை, அது நன்கு காய்ந்ததும் ஒரு சிறு துண்டை எடுத்துக் அதை நெருப்பால் பற்ற வைத்து சிறிது நேரம் விட்டு வைத்தால் போதும். கொசுக்கள் இருக்கும் இடம் தெரியாமல் பறந்து போய் விடும். மேலும் ஒரு சிறப்பம்சம், இதை பற்ற வைத்து எரியும் போது இதில் இருந்து எந்த ஒரு நாற்றமும் வராது. இதனால் இவை மற்ற செயற்கை கொசு விரட்டிகள் போல நமது நாசிகளிக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படுத்துவதில்லை.

### தலைவலி மற்றும் மூக்கின் இரத்தம் வடிதலுக்கான தீர்வு :

ஒரு யானை நாள் முழுவதிலும் எடுத்துக் கொள்ளும் பலவிதமான பழங்கள் மற்றும் தாவரங்களின் விளைவாக, அவற்றின் கழிவுப்பொருட்கள் பாரம்பரிய சிகிச்சை முறைக்கு சிறந்த மருந்தாக பயன்படுகிறது. அவை சிறந்த மருத்துவ குணங்கள் கொண்டதால் சில உடல் உபாதைகளுக்கு மிகவும் ஏற்றதாக கருதப்படுகிறது. யானையின் சாணியில் செய்த வரட்டியில் சிறிது துண்டாக எடுத்துக் கொண்டு அது தீயிட்டு அந்த புகையை நுகர்வதால் கடுமையான தலை வலியில் இருந்தும் நிவாரணம் பெறலாம். தலைவலிகளை குணப்படுத்தவும், பல்வலி மற்றும் பல்வகை நோய்களை கட்டுப்படுத்தவும் யானைச் சாணம் மிகவும் உதவுகிறது. குறிப்பாக சைனஸ் போன்ற நோய்களில் இருந்தும் நம்மை காக்கிறது. மேலும் இது மூக்கில் இருந்து இரத்தம் வடியும் நோயிலிருந்தும் நம்மை வெகுவாக காக்கிறது. எனவே ஒரு குறிப்பிட்ட வியாதியை குணப்படுத்தப் பயன்படுத்தப்படும் ஒரு குறிப்பிட்ட மூலிகை அல்லது பட்டையை தேடிப் போகாமல், சில யானைப் வரட்டிகளை பற்றவைத்து அவற்றை சுவாசித்தால் அது மிகுந்த பலனை அளிக்க வல்லது.

### பயோ காஸ் :

பயோ காஸின் தேவை நாளுக்கு நாள் மிக முக்கியமான வலுத்து வருகிறது. புதை படிவ எரிபொருள் பூகோள வெப்பமயம் ஆதலுக்கு மிக அதிக அளவில் துணை புரிகிறது. ஆனால் எரிபொருள்களின் அதிக எண்ணிக்கையிலான தேவையை கருத்தில் கொண்டு நம்மால் அதை குறைக்க முடிய வில்லை. ஆதலால் எரிபொருளுக்கான மாற்று வழிகளை கண்டுபிடிக்கும் நேரம் இப்பொழுது வந்து விட்டது. அதிர்ஷ்டவசமாக, சில உயிரியல் பூங்காக்கள் மற்றும் சரணாலயங்கள் அவர்களது விலங்குகளின் சாண வளங்களைப் பயன்படுத்துவதற்குத் தொடங்கி விட்டன. பயோ காஸை சில உயிரணுக்களின் உதவியுடன், கழிவுப்பொருட்களில் பயன்படுத்தி அடுப்பிற்கான வாயு மற்றும் மின்சாரம் ஆகியவற்றை உருவாக்க ஆரம்பித்திருக்கிறார்கள். நமக்கு தேவைப்படும் அதிகப்படியான பயன் பாட்டிற்கு யானை வெளியிடும் அதீத கழிவுப் பொருட்கள் மிகுந்த அளவில் உபயோகப் படுகிறது. யானை சாணிகளில் இருந்து அதன் கரிமக் கழிவுகளை பிரித்து எடுக்க வேண்டும். அதிலிருந்து மீத்தேன் மற்றும் காபனீர் ஓட்சைட் முதலியவை கிடைக்கும். இதனை வாயு சேகரிக்கும் இயந்திரத்தில் சேகரித்து வைக்க வேண்டும். இந்த வாயுவின் மூலம் நாம் அடுப்புகளுக்கு நெருப்பூட்டலாம். இந்த செயல்முறையின் போது ஊட்டச்சத்து நிறைந்த உயிர்—உரம் உருவாக்கப்படுகிறது, இவற்றை நாம் பயிருக்கு ஒரு சிறந்த உரமாக பயன்படுத்தப்படலாம். யானைகள் வசிக்கும் இடங்கள் பொதுவான வாழ்வியலுக்கான இடங்கள் என்று கண்டறியப்பட்டுள்ளன.யானைகள் விஞ்ஞானிகளால் 'சூழல் அமைப்பு பொறியியலாளர்" என அன்புடன் பெயரிடப் படுகின்றன.. பூச்சிகள், தேள், தேனீக்கள் மற்றும் மில்லிபீட்கள் உட்பட பல வகையான பூச்சிகளின் உருவாக்கத்திற்கு இவை மிகப் பெரிய உதவி புரிகின்றன. ஆதலால் இவற்றின் நன்மைகளை நாம் அறிந்து கொள்வது அவசியம்.

# உலகின் மிகப்பெரிய சூரிய மின் உற்பத்தி நிறுவனம்

மரபுசார் ஆற்றலை அதிகம் பயன்படுத்துவது மனிதகுலத்திற்கு பல்வேறு சிரமங்களைக் கொடுக்கிறது. பருவநிலை மாற்றம், வெப்பமயமாதல் என இதனால் இயற்கை அதன் அச்சில் இருந்து விலகி வெகுதூரம் பயணித்துவிட்டது.

நம்மால் மீண்டும் பூமியைப் பசுமையாக்க வேண்டும் என்றால் கிட்டத்தட்ட அமெரிக்கா அளவிற்கு மரங்களை உருவாக்க வேண்டும் என சமீபத்திய ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது. அதேவேளையில் மரபுசாரா ஆற்றல் மூலம் இயற்கையின் மீதான வெப்பத்தின் தாக்கத்தைக் குறைக்கலாம் என்பதற்கு சாட்சியாக மொராக்கோவில் உருவாகி வருகிறது உலகின் மிகப்பெரிய சோலார் பூங்கா. இங்கு உற்பத்தியாகும் மின்சாரத்தைக்கொண்டு பராகுவே போல இரு நாட்டிற்கு மின்சாரம் வழங்கலாம். அதாவது சுமார் 10 லட்சம் குடும்பங்களுக்கு தேவையான மின்சாரத்தை இந்த பூங்காவால் தயாரிக்க முடியும்.

மொராக்கோவின் (நூர் குவார்சேட்) Noor Ouarzazat என்னும் பகுதியில் சுமார் 3000 ஏக்கர் பரப்பளவிற்கு இந்த பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இது 3500 கால்பந்தாட்ட மைதானத்திற்கு சமமாகும். இதன்மூலம் 580 மெகாவாட் மின்சாரத்தை உருவாக்க முடியும். இவ்வளவு மின்சாரத்தை பெட்ரோல் நிலக்கரி கொண்டு உருவாக்கினால் சுமார் 760,000 டன் கரியமிலவாயு உருவாகும். இந்த திட்டம் எத்தனை முக்கியமானது என்பதற்கு இதுவே சாட்சி.

சஹாரா பாலைவனத்தின் அருகில் 243 அடி உயர குறத்தில் இந்த சோலார் தகடுகள் பதிக்கப்பட்டுள்ளன. உருகிய நிலையில் உப்பினை சேகரித்துவைக்க தனியாக கலன்களும் இங்கே அமைப்பட்டிருக்கிறது. பகல்வேளையில் இந்த உப்பு கொள்கலனில் சூரியக்கதிர்கள் பாய்ச்சப்பட்டு உருக்கப்படும். அதில் தேங்கியுள்ள வெப்பத்தினை இரவில் மின்சாரமாக மாற்றிக்கொள்கிறார்கள். தற்போதைய நிலையில் மொராக்கோ 97% மின்சார உற்பத்தியை மரபுசார் வளங்களைக்கொண்டு பெறுகின்றனர். ஆனால் இந்த திட்டம் மூலம் நாட்டின் மின்சார தேவையில் 42 சதவிகிதத்தை சமாளிக்கலாம். இனிவரும் காலங்களில் இந்த அளவு மேலும் அதிகரிக்கும் என இங்கு பணியாற்றும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இங்கே 2010 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பு ஒன்றில் அடுத்த இருபது ஆண்டுகளில் நாட்டின் மின்சார தேவை இருமடங்காகும் எனத் தெரிவிக்கப்படிருந்தது. இதையடுத்து தீவிரமாக செயல்பட்ட அந்நாட்டு அரசு உலகவங்கியிடம் 400 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகப்பெற்று இந்த திட்டத்தை துவங்கியது. கிளீன் ரெக்னோலாஜி நிறுவனம் 216 மில்லியன்



அமெரிக்க டொலர்களை இந்த சோலார் பூங்காவில் முதலீடு செய்துள்ளது. இயற்கைக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வண்ணம் வளர்ச்சி பாதையினை அமைப்பதுதான் நம்மிடம் இருக்கும் ஒரே வழி என்பதை மொரோக்கோ மக்கள் நான்கு புரிந்துகொண்டுவிட்டனர்.